Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

கொழும்பில்தான் தரமா ???? இங்கு இல்லையா???
எங்களாலும் முடியும்

கனவு -நனவு

டிஜிட்டல் பெயர்ப்பலகைகள்

டிஜிட்டல் பனர்கள்

டிஜிட்டல் பிறின்ரிங்

அடையாள அட்டைகள்

வாகன விளம்பரங்கள்

மிராக்கில் மீடியாவேக்ஸ் (பிறைவேற்) லிமிற்டட்
768,பருத்தித்துறை வீதி,நல்லூர்,யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021-2225640,0773126471

MMW

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2037 பங்குனி 22 | ஹிஜ்ரி 1427 ற.அவ்வல் 6 | (05.04.2006) | புதன்கிழமை | இதழ் 186

# ராணுவ பகுதியில் ஆயுதக்குழுக்கள்: சமாதான முயற்சிகளைப் பாதிக்கும்!



## கண்காணிப்புக்குழு மீண்டும் எச்சரிக்கை

கொழும்பு—

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் துணை ஆயுதக் குழுக்கள் இயங்குவது - சமாதான முயற்சிகளைக் கடுமையாகச் சீர்குலைக்குமென போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மீண்டும் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலைப்ஸ் டோட்ரயர் கருத்து வெளியிடுகையில் -

வாழைச்சேனையில் கடந்த வாரம் கருணா குழுவினரை கண்காணிப்புக் குழுவினர் சந்தித்தனர். இதன்மூலம் எதுவித சந்தேகத்துக்கும் இடமின்றி அவர்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இயங்குவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கருணா குழுவினரை கண்காணிப்புக்குழுவினர் சந்தித்தபோது அங்கு 10 முதல் 15 வரையானோர் இருந்தனர்.

அவர்கள் ரி-56 ரக ஆயுதங்களை வைத்திருந்தனர். கடந்த வாரம் வாழைச்சேனைப் பகுதி கிராமங்களை அவர்கள் சுற்றி வளைத்திருந்தனர்.

அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியில் கருணா குழுவினர் இயங்குவதாக நாங்கள் முன்னர் தெரிவித்திருந்ததை இது உறுதிப்படுத்துவதாக உள்ளது.

அதேவேளை,அந்தக்குழுவினரது அரசியல் அமைப்பாகக் கூறப்படும் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் என்ற அமைப்பின் அலுவலகமும் பாடசாலை ஒன்றுக்கு அருகாமையில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்டோரை விடுவிக்கக்கோரி நேற்று போராட்டம்!


மட்டக்களப்பு—

மட்டக்களப்பு - வெலிக்கந்த பகுதியில் வைத்து கருணா குழுவினரால் கடத்திச் செல்லப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக தொண்டர்களை விடுவிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரி, வடக்கு - கிழக்கிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் நேற்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதனால் அனைத்து முன்பள்ளிகளின் கல்விச் செயற்பாடுகளும் செயலிழந்தன.

தமிழர் புனர்வாழ்வுக்கழக வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் மட்டக்களப்பிலிருந்து கிளிநொச்சிக்கு வந்துகொண்டிருந்தவேளை வெலிக்கந்த பகுதியில் வைத்து கடந்த ஜனவரி மாதம் கடத்தப்பட்டனர்.

இவர்கள் கடத்தப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை (12ஆம் பக்கம் பார்க்க)

# நிரந்தரமான சமாதானத்துக்கு உதவும் எந்த சக்தியுடனும் ஒத்துழைக்க தயார்



## சோனியா காந்தி தெரிவிப்பு

கொழும்பு—

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு தரப்புடனும் ஒத்துழைப்புடன் செயற்படத் தயாரென இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி தெரிவித்தார்.

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு






கொழும்பு

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு தரப்புடனும் ஒத்துழைப்புடன் செயற்படத் தயாரென இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி தெரிவித்தார்.

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)



# நோர்வேயின் விசேட தூதுவர் இன்று கிளிநொச்சி வருகை!

கொழும்பு

சமாதானமுயற்சிகளுக்கான நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

அரச பேச்சுக்குழுத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை அவர் சந்தித்தார்.

இனப்பிரச்சினைக்குப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் இல்லை என்றும், உள்ளூராட்சி சபைத்தேர்தலில் அரசாங்கம் பெற்ற வெற்றியானது அமைதி முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல ஊக்கமளிக்கும் என்றும் நிமால் சிறிபால டி சில்வா இந்தச் சந்திப்பின் போது தெரிவித்தார்.

தற்போதைய அமைதிமுயற்சிகளுக்கு தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு அவசியம் என்பதை ஜோன் ஹன்சன் பௌயர் வலியுறுத்தினார்.

ஜெனிவா பேச்சுக்களின் முடிவுகளை அரசாங்கம் பின்பற்றுவதாகவும், அமைதிமுயற்சிகளை தொடர்வதற்கு ஏதுவான சூழ்நிலையையும், அனைத்து இனத்தவருக்கும் பயன்படுகிற சூழ்நிலையையும் அரசாங்கம் ஏற்படுத்துவதாகவும் நிமால் சிறிபால டி செல்வா இந்தச்சந்திப்பில் கூறினார்.

இலங்கைக்கான (12 ஆம் பக்கம் பார்க்க)

# வேலணையை சேர்ந்த தந்தை-மகன் ஜேர்மனி வீதி விபத்தில் உயிரிழப்பு!

பேர்ளின்

ஜேர்மனியில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் வேலணையைச் சேர்ந்தவர்களான தந்தையும், மகனும் உயிரிழந்தனர்.

வேலணையைச் சொந்த இடமாகக் கொண்ட விநாயகமூர்த்தி கிருபாமூர்த்தி (வயது 52), அவரது மகனான கிருபாமூர்த்தி வசந்தரூபன் (வயது 18) இருவருமே விபத்தில் உயிரிழந்தவர்களாவர்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஜேர்மனியில் குடும்பமாக வசிக்கும் இவர்கள் அங்கு சொந்தமாக வர்த்தக நிறுவனம் ஒன்றை நடத்தி வந்தனர்.

தந்தையும், மகனும் தமது வர்த்தக நிறுவனத்திலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம், அவர்கள் பயணம் செய்த கார் - கன்ரர் வாகனம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகிறது.

மகனான வசந்தரூபன் விபத்து நடந்த இடத்திலேயே உயிரிழந்தார். தந்தை கிருபாமூர்த்தி படுகாயங்களுடன், மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிரிழந்தார். இந்த விபத்துச் சம்பவம் (12ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் கைதுசெய்யப்பட்ட மூவரை

# விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி மனித உரிமை ஆணைக்குழுவில் புகார்

யாழ்ப்பாணம்

பருத்தித்துறை நகர்ப்பகுதியை இராணுவத்தினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியவேளை - கைது செய்யப்பட்ட ஐந்து பேரில் மூவர் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. அவர்களை விடுதலை செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

பருத்தித்துறை - இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த எஸ். கிருஸ்ணராஜா மற்றும் இவரது இரு பிள்ளைகளான கிருஸ்ணராஜா சிவரூபன், கிருஸ்ணராஜா விஜயகாந்தன் ஆகிய மூவருமே இதுவரை விடுவிக்கப்படவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை நகர்ப்பகுதியை திடீரென சுற்றிவளைத்த இராணுவத்தினர் - இரண்டாம் குறுக்குத் தெருவில் தேடுதல் நடத்தியவேளை - ஒரே குடும்பத்தில் உள்ள ஐந்து பேரைக் கைது செய்திருந்தனர்.

இவர்களில் தாயும், மகளும் விடுதலை செய்யப்பட்டபோதிலும் - ஏனைய மூவரையும் விடுதலை செய்யவோ அல்லது நீதிமன்றில் ஆஜர் செய்யவோ இல்லை. இரு பிள்ளைகளும் நடைபெறவுள்ள க. பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். எனவே, அவர்களை உடன் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மனித உரிமை ஆணைக்குழுவிடம் உறவினர்கள் கோரியுள்ளனர்.

இந்த முறைப்பாடு (12 ஆம் பக்கம் பார்க்க)

வேகமாக விற்பனையாகிவரும் ஜப்பான் தொழில்நுட்பத்தில்தயாரிக்கப்பட்ட

**YAMATO**

மோட்டார் சைக்கிள்களுக்கு விற்பனை முகவர்கள் கீழ்க்காணும் பிரதேசங்களுக்கு தேவைப்படுகின்றது.



வவுனியா

முல்லைத்தீவு

கிளிநொச்சி

சாவகச்சேரி

யாழ்ப்பாணம்

மாங்குளம்



செரன்டிப் மோட்டோர் என்ரபிறைஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு.
தொலைபேசி : 0112 - 341580, 0112 - 341581
Fax : 0112 - 454608, E.Mail : zmc@slt.lk


## விண்ணப்பம் கோரல்

கோப்பாய்

இந்த ஆண்டில் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெறுவதற்கு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பம் கல்வி அமைச்சால் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை இந்தமாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

விண்ணப்பப்படிவங்களை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பெற்றுக் கொள்ளலாமென அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தெரிவித்தார்.


ராஜா யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த



மெர்குரிப்பூக்கள்

பு. நேரம் : 10.30,2.30, 6.30,9.00

நிறைஞ்சனாஸ் சங்கானை

விசால், மீராஜஸ்மின் நடித்த

சண்டைக்கோழி

கா.நே:(பு.நே) 11.00, 2.45, 6.00

நாதன்ஸ் யாழ்ப்பாணம்

இன்றுமுதல்-

பரத், சந்தியா நடித்த

காதல்

தினசரி நான்கு காட்சிகள்

கா. நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்

இன்றுமுதல்

மாதவன், பூஜா, வடிவேல், மணிவண்ணன் நடித்த

தம்பி புதிய வெளியீடு

கா.நே 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)


# கசிப்பு விற்பவர்களை தேடி வரும் படையினர்!

மானிப்பாய்

ஆனைக்கோட்டைப் பகுதியில் இரவு வேளைகளில் இராணுவத்தினர் வீடுவீடாகச் சென்று கசிப்பு விற்பனையில் ஈடுபடுவோரைத் தேடி வருகின்றனர்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் சாவல்கட்டு - யாவில் பகுதியிலுள்ள வீடுகளுக்கு சென்ற இராணுவத்தினர் உறக்கத்தில் இருந்தவர்களை அழைத்து வீட்டில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும், அதனால் தாம் வீட்டைச் சோதனையிடப் போவதாகவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து வீட்டினுள் நுழைந்த ஐந்து இராணுவத்தினரையும் சோதனையிட அவர்கள் அனுமதித்தனர்.

வீட்டிலுள்ள அறைகள் அனைத்தையும் திறந்து துருவித்துருவிச் சோதனையிட்ட படையினர் -பின்னர் அங்கிருந்தவர்களின் அடையாள அட்டைகளையும் பரிசோதித்து விட்டுச் சென்றுள்ளனர். (100)

## மானிப்பாய் பிரதேச சபையில் இன்று பிரிவுபசார விழா

மானிப்பாய்

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையிலிருந்து இடம் மாற்றம் பெற்றுச்சென்ற 11 உத்தியோகத்தர்களுக்கான பிரிவுபசாரவிழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச சபையின் ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் எஸ்.ரட்ணராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - இடம் மாறிச் சென்ற 11 உத்தியோகத்தர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்து நினைவுப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வை பிரதேச சபை ஊழியர் நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. (100)

## வாசிப்பு மாதத்தையொட்டி பரிசளிப்பு விழா

சாவகச்சேரி

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சரசாலை பொது நூலகத்தில் நடைபெற்ற வாசிப்புப் போட்டிகளில் பங்குபற்றியோருக்கான பரிசளிப்பு விழா இன்று மாலை 3 மணிக்கு பிரதேச சபையின் சரசாலை உப அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி பிரதேசசபை செயலர் கு.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில்- யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட நூலகர் ஸ்ரீ.அருளானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (29)


## பகுதிநேர விரிவுரையாளர் தேவை

முகாமைத்துவக் கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப்படும் GAQ, B.com, AAT கற்கைநெறிகளில் பின்வரும் பாடங்களை சனி, ஞாயிறு கிழமைகளில் பகுதிநேரம் கற்பிக்கக் கூடியவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பாடம்**

- முகாமைத்துவம்
- கணக்கீடு
- கணிதம், புள்ளிவிபரவியல்

**தகைமைகள்**

- குறிப்பிட்ட பாட துறைகளை உள்ளடக்கி சமர்ப்பிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
- மேற்படி தகைமை உடையவர்கள் 08.04.06 - 09.04.06 தினங்களில் காலை 9.00 தொடக்கம் 4.00 மணிவரை தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

இணைப்பாளர்,
இல.139, மீனாட்சி அம்மன் கோவிலடி,
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.



நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நடத்தும் க.பொ.த உயர்தரம் - 2006 பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான

## இலவச முன்னோடிக் கருத்தரங்கு

| | | | | |
|---|---|---|---|---|
| இடம் | : | யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை தம்பையா மண்டபம். | | |
| காலம் | : | 11.04.2006 காலை 8.30 தொடக்கம் 5.30 மணி வரை. | | |
| | | DMI ஆசிரியர் குழாம் | | |
| பாடங்கள் | : | கணக்கியல் | : | சாம் |
| | | பொருளியல் | : | இராஜேஸ்வரன் |
| | | வர்த்தகம் | : | பசில் |

தேசத்தின் வங்கியாளர்
இலங்கை வங்கி
BOC

105, Arasady Road, Jaffna.
FOR ALL ENGLISH CLASSES
LONDON ENGLISH COLLEGE

| | |
|---|---|
| Diploma in English | Duration : 3 Months |
| IELTS | Duration : 3 Months |
| Spoken English | Duration : 3 Months |
| English Litterature (10, 11, 12, 13) | Duration : Annul |
| English for KIDS | Duration : Annul |
| Linguistics - GAQ, B.A | |

தரமான கணினிக் கல்விக்கு ஓர் புதிய உதயம்!
உங்களுக்காக, 100% செய்முறைப் பயிற்சியுடன், முற்றிலும் தமிழ்மொழி விளக்கங்களுடன்...
CICS Computer Technologies
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
Phone: 0777917610

AIMS
Your Training Partner
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
#118, Palaly Road, Thirunelvely, Jaffna.
Center for FOSS & LAMP

STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam
Leading IT Institution in Jaffna

COMMERCIAL BANK
கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்



## 10 ஆம் ஆண்டு நீங்கா நினைவுகள்

தாயின் மடியில் 11.11.1978

தாயக மண்ணில் 05.04.1996



**கப்டன் விடுதலை / பூலோ**

தன் மானத் தலைவன் வழியில் இணைந்து
தமிழீழத்தின் விடுதலைக்காகப் போராடி
யாழ் மண்ணை முத்தமிட்டு விழி மூடிப்
போன எங்கள் வீர மைந்தனே!


கல்லறையில் மீளாத் துயில் கொண்டுறங்கும்
எங்கள் விடுதலையே தாய்மானம் காக்க
தமிழீழம் கிடைக்க தமிழுக்காய் உயிர்தந்த
ஆயிரமாயிரம் இலட்சிய வேங்கைகளுடன்
இணைந்து கொண்ட எங்கள் தேச மைந்தனே!
உங்கள் கனவுகள் நனவாகும்.
நாளை எம் தேசம் விடியும்.
இது உறுதி.

(சி/4455)

# சேக்ஷ்பியரின் நாடகங்களைப் போலவே புதுவை படைப்புக்களும் ஆய்வுக்குட்படுத்தப்படும்



## லண்டன் கிங்ஸ்டன் பரோ முதல்வர் யோகநாதன்








கொழும்பு —

இன்றைய மேற்குலகின் கனவுக ளாக விளங்கும் சமசந்தர்ப்பம், சமூக உள்வாங்கல், சக்தியளித்தல், மனித உரிமைகள், சமூக ஜனநாயகம், பெண்விடுதலை,மனிதநேயம் என் கின்ற கருத்துருவங்களை புதுவை யின் பாடல்கள் எம் மண்ணின் காட்சிகள் ஊடாக வெளிப்படுத்துவது அவரின் கவித்துவத்தின் ஆளுமை யின் சிறப்பு என, லண்டன் கிங்ஸ்டன் பரோவின் முதல்வர் யோகன் யோக நாதன் தெரிவித்தார்.

லண்டன் ரைஸ்லிப் வின்சன் சேர்ச்சில் அரங்கில் கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 40 ஆண்டு கால கவிதைச் சோலையும், கலையரங் கும் எனும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகை யில்:-

தலைவன் இன்றித் தொண்டன் இல்லை, தொண்டன் இன்றித் தலை வன் இல்லை என்கிற மகத்தான தத் துவம் புதுவையைக் கவிஞனாக வும், போராளியாகவும் இயங்க வைத்தது. தலைவனும், தொண்ட னும் சமத்துவமாக நிற்கும் வர லாற்றைப் புதுவை இலக்கியப்படுத்தி னார்.

இந்த வாழ்க்கை அனுபவத்தை இரசித்துச் சுவைத்துச் சொல் கொண்டு அவர் கவியாக்கிய பொழுது அவரின் கவிதைகள் சேக்ஷ்பியரின் படைப்புக்களையும் விஞ்சும் உலகப் புகழ்பெற்றுள்ளன.

அவரின் படைப்புக்கள் சேக்ஸ் பியர் நாடகங்கள் போல் உலகப் பல் கலைக்கழகங்களில் ஆய்வு செய்யப் படும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

அந்த நேரத்தில் அவரது படைப் புக்கள் எங்கள் மண்ணின், மக்களின், தலைமையின், வரலாற்றின் தன்மை களை உணர்த்தும் கவிதா சக்தியாக வும் அவை விளங்கும் எனத் தெரி வித்தார்.

இந்த நிகழ்வில் டொக்டர் ஆனந்தி கருணைலிங்கம் மங்கள விளக் கேற்றினார். அதனைத்தொடர்ந்து தாயகத்துக்காய் தம் இன்னுயிர் ஈந்த மாவீரர்களுக்கும் மக்களுக்கும் அக வணக்கம் செலுத்தப்பட்டது.

கவிஞர் பாலரவியின் வரவேற்பு ரையையடுத்து புதுவை இரத்தின துரையின் தொலைபேசி உரை ஒலி பரப்பப்பட்டது.

ஆய்வாளர் பற்றிமாகரன், டொக் டர் என்.எஸ்.மூர்த்தி, சிவஸ்ரீ கமல நாதக்குருக்கள், தமிழகத்தின் சட்ட வல்லுநர் அருட்தந்தை ராஜமணி, சட்டத்தரணி சிறீஸ்கந்தராசா, பொறி யியல் வல்லுநர் ராஜமனோகரன் உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

லண்டனில் புகழ்பெற்ற நடன ஆசிரியைகள் பத்மினி குணசீலன், ரஜினி சுரேஸ் ஆகியோரின் மாணவி களும் ரம்யா குணசேகரமும் புதுவை யின் பாடல்களுக்கு சிறப்பான நட னங்களைத் தயாரித்து வழங்கினர்.

மட்டக்களப்பின் கலைஞர் கோவி லூர் செல்வராசா, ஹொலிவூட் புகழ் பாடகர் மாணிக்கம் யோகேஸ்வரன் ஆகியோரின் பாடல்கள் இடம்பெற்றன.

கலைப்படைப்புக்களை வழங்கிய வர்களுக்கு திருமதி அபயலிங்கம் கவி தைச்சோலை நினைவுப் பரிசில் கள்ள வழங்கினார்.

புதுவை இரத்தினதுரைக்கான நினைவுப்பரிசைப் பிரபல வர்த்தகர் வாகனிடமிருந்து - மாலிகா பெற்றுக் கொண்டார்.


தமிழகத்தின் மூத்த கவிஞர் அமுது புலவர் விழாவில் கலந்துகொண்டார். மக்களை நேசிக்கும் கவிஞர் ஒரு வரின், மக்களால் நேசிக்கப்படும் கவி ஞர் ஒருவரின் நாற்பதாண்டுகாலக் கவிதைகளை ஆராய்வதென்பது மக்களின் நாற்பதாண்டு காலத்து நிகழ்வுகளை எடுத்து நோக்கும் முயற்சி.

அந்த வகையில் மக்களின், மண் ணின் தலைமையிலான தலை வனின் சாட்சிகளை, மாட்சிகளை, சோதனைகளை, வேதனைகளை, சாதனைகளை, உறுதிகளை உரைக் கும் சொற்குவியல்கள், படிமப்படைப் புகள் புதுவையின் கவிதைகள்.

இதனால்தான் புதுவையின் நாற்பதாண்டுகால கவிதைகள் குறித்த பார்வையை மக்கள் தமது உரை யில், கவிதையில், கலையில் வெளிப் படுத்த இங்கு கூடியுள்ளனர் என்று நிகழ்வில் பேசியோர் குறிப்பிட்டனர்.

# அரசாங்க மொழிக் கொள்கையை மலையகத்திலும் செயற்படுத்தவேண்டும்

## அமைச்சர் டியூ. குணசேகர



கொழும்பு —

இலங்கையில் அரசமொழிக் கொள்கையைச் செயற்படுத்த வில்லையெனில் வடக்கு - கிழக் கைப் போன்று மலையகத்திலும் பிரச் சினைகள் தோன்றுமென - அரசியல் யாப்பு விவகார அமைச்சர் டியூ. குண சேகர தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

1987 ஆம் அண்டு தமிழ்மொழி யும் அரசமொழியாக நேரடியாக எழு தப்பட்ட போதிலும், செயற்படுத்தப்பட வில்லை. தற்போது அரசமொழியை செயற்படுத்துவது தொடர்பாக நாம் கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத் துள்ளோம். அதனைச் செயற்படுத்த வில்லையெனின், அது சமாதான முயற் சியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அரசாங்கசேவையில் தமிழ்மொழி மூலம் சேவையாற்றுபவர்கள் 5 வீத மானோரே உள்ளனர். ஆங்கிலத்தில் சேவையாற்றக் கூடியவர்கள் பத்து வீத மானோரேயாவர். இந்த இரண்டு மொழி மூலமும் பணியாற்றுபவர் கள் மிகக்குறைவு.

வருடாந்தம் நான்கு வீதமா னோர் ஓய்வு பெறுகின்றனர். இந்த நாட்டில் 25 வீதமானோர் தமிழ் பேசு கின்றனர். ஆனால், மொழிச் சிக்கல் 1956 ஆம் ஆண்டு தொடங்கி, இதுவ ரையில் தீர்க்கப்படவில்லை. எமது நாட் டில் மொழியை 100 வருடங்களுக்கு முன்னர் கற்பித்தது போன்றே தற் போதும் கற்பிக்கின்றனர். எனவே, எவ் வாறு விரைவாக மொழியைக் கற்பிக் கும் தொழில்நுட்பமுறையை அறி முகப்படுத்துவது.

அரச சேவையிலுள்ள 7 லட்சம் பேருக்கு ஒரே தடவையில் மொழி யைக் கற்பிக்கமுடியாது. ஆனால், நடைமுறை ரீதியாக இந்தச் சவாலை வெற்றிகொள்ளமுடியும். புதிதாக அரச சேவைக்கு இணைத்துக்கொள்ளப் படுபவர்களுக்கு சிங்களம், தமிழ் மொழி தெரிந்துகொள்வது அவசிய மென எதிர்காலத்தில் கொள்கை ரீதி யாகத் தொடர்ந்தும் பரவலாக்கப் படும்.

அரச மொழிக் கொள்கை தொடர் பாக பரந்தளவிலான விளக்கம் கொடுக்கப்படவேண்டும். அதிகமா னோர் தமது மொழியை மட்டும் தெரிந்திருந்தால் போதும் என்று நினைக்கின்றனர். எமது நாட்டுக்கு அது சரியான கொள்கை அல்ல.

இரு மொழிகள் தெரிந்த மொழி பெயர்ப்பாளர்களுக்கு எழுதுவினை ஞர் ஒருவருக்குக் வழங்கப்படும் சம்ப ளத்தைக் கொடுப்பது சரிவராது. 25 ஆயிரம் அளவில் உயர்ந்த சம்ப ளத்தை வழங்கவேண்டும். அவ் வாறே பட்டதாரிகளையும் இணைத் துக்கொள்ளவேண்டும்.

இன்று நாடாளுமன்றிலும் மொழி பெயர்ப்பாளர்கள் குறைவு. அமைச்சர வையில் எத்தனை பேருக்கு ஆங்கி லம் தெரியும். இந்த மொழி தெரிய வேண்டுமென்பதில்லை. நல்ல மொழி பெயர்ப்பாளரையாவது வைத்திருக்க வேண்டும்.

கடந்த வாரம் இலங்கைக்கு வந்த பூட்டான் சபாநாயகருக்கு ஆங்கிலம் தெரியாது. ஆனால், நல்லதொரு மொழிபெயர்ப்பாளரை அழைத்து வந்திருந்தார்.

இந்த மொழிப் பயிற்சியை பாட சாலைகளிலிருந்து ஆரம்பிக்கவேண் டும். ஒரு மொழியைக் கற்க 6 மாதங் கள் போதுமானதாகும். ரஷ்யாவில் மருத்துவக் கல்வியைப் பயிலச் செல் கையில் ஒரு வருடம் அல்லது ஆறு மாதத்தில் மொழியைக் கற்றுக்கொள் கின்றனர் எனத் தெரிவித்தார். (தே)

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் ஆறு பேர் இடைநிறுத்தம்

வவுனியா —

கையடக்கத் தொலைபேசிகளைத் தவறான முறையில் பயன்படுத்தி யதற்காக வவுனியா தேசிய கல்வியி யற் கல்லூரியில் கல்விபயிலும் 6 மாணவர்கள் இடைநிறுத்தம் செய்யப் பட்டுள்ளனர்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் பகிடி வதைகள் குறித்து ஊடகங்களுக்குத் தகவல் தெரிவித்ததற்குத் தண்டனை யாக இந்த இடைநிறுத்த நடவடிக் கையைக் கல்லூரி நிர்வாகம் செய் துள்ளதாக மாணவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேவேளை, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தெரி விக்கையில்:-

கையடக்கத் தொலைபேசியில் உள்ள நிழற்படக் கருவிமூலம் அநா வசியமான படங்களை எடுத்ததற் காக இந்த 6 மாணவர்களும் இடை நிறுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரி வித்தார்.

# விசேட அதிரடிப் படைக்கு 342 பேர் புதிதாக இணைப்பு

கொழும்பு —

விசேட அதிரடிப்படை மேலும் 342 பேரை புதிதாகத் தனது படைப் பிரிவில் இணைத்துக்கொண்டுள் ளது. இவர்களுக்கான விசேட பயிற் சிகள் கட்டுக்குருந்தவிலுள்ள விசேட அதிரடிப்படையினரின் பயிற்சி முகா மில் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்ட விசேட அதிரடிப்படையின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லெகே அங்கு உரையாற்றுகையில்:-

விசேட அதிரடிப்படைக்கு இணைத் துக்கொள்ளப்பட்ட இந்த 342 பேரும் 49 ஆவது பயிற்சி அணியில் பயிற்சி பெறுகின்றனர்.

உங்களது கடுமையான பயிற்சி யானது பொலிஸ் திணைக்களத் துக்கும், நாட்டுக்கும் பெரும் பய னுள்ளதாக அமையுமெனத் தெரிவித் தார்.

# சவுதியில் மரணதண்டனையை எதிர்நோக்கும் இலங்கையர்கள்!

## சர்வதேச மன்னிப்புச்சபை கவலை

கொழும்பு —

சவுதி அரேபியாவில் மரண தண் டனையை எதிர்நோக்கும் மூன்று இலங்கையர் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை கவலை தெரிவித் துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த மூன்று நபர்களுக்கு கடந்த ஆண்டு மார்ச் மாதம் மரண தண்டனை உறுதிப் படுத்தப்பட்டுள்ளதால், எந்த நேரமும் மரண தண்டனை நிறைவேற்றப்பட லாம் எனச் சர்வதேச மன்னிப்புச்சபை சர்வதேச சமூகத்துக்கு இந்த விடயத் தைக் கொண்டுவந்துள்ளது.

ஆயுதக் கொள்ளைச் சம்பவங்க ளுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதியே இந்த மூவரும் றியாட்டி லுள்ள - ஹெயர் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நபர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்துச்செய் யும் உரிமை சவுதி அரேபிய மன்ன ருக்கு மட்டுமே உள்ளதென சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

# தேர்தலில் வீரவசனங்கள் பேசிய ஜே.வி.பி. தோல்விகண்டுள்ளது!

## அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு



கொழும்பு —

உள்ளூராட்சித் தேர்தலில் ஜே.வி.பியினர் வீரவச னங்களைப் பேசி அடைந்த படுதோல்வியை -ஜெருச லேம் நகரில் கல்லெறி வாங்கிய கழுதையுடன் ஒப்பிட்டு, சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க விமர்சனம் செய்துள்ளார்.

உள்ளூராடசி சபைத் தேர்தல் முடிவுகள் குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஜே.வி.பியின் உதவி இன்றி எங்களால் எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ளமுடியும். சுதந்திரக்கட்சி என் பது ஒரு ஆலவிருட்சம் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது. கிராமத்தை ஆளப்போவதாக வீரவசனம் பேசி கிராமங்களை எங் களிடம் ஒப்படையுங்கள், கிராம மக்களின் ஆதரவு எங்களுக்கே, அனைத்து நகரசபைகளிலும் ஜே.வி.பி. முத்திரை பதிக்கும் என்றெல்லாம் கூறியவர் களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தனித்து பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்குத் தயார்!

## ஜே.வி.பி. தெரிவிப்பு



கொழும்பு —


நாடாளுமன்றத் தேர்தலை தமது கட்சி தனித்து எதிர் கொள்ளத் தயாராக இருப்பதாக ஜே.வி.பி. அறிவித்துள் ளது.

இதுகுறித்த அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கருத்துத் தெரிவிக்கையில்:-

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 20 வீதமான இடங் களை நாங்கள் பெற்றுள்ளோம். இந்தத் தேர்தலில் நாம் கூடுதல் இடங்களைப் பெற்றுள்ளோம். அதிக வாக்காளர்கள் எமக்கு வாக்களித் தனர். நாட்டின் 2 ஆவது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை 5 உள்ளூராட்சி சபைகளில் தோற்கடித்துள்ளோம். கடந்த தேர்தலில் எமது கட்சியின் சார்பில் 219 உறுப்பினர்கள் தெரிவாகினர். தற்போது 365 பேர் தெரிவாகியுள்ளனர்.

2001 ஆம் ஆணடு பொதுத் தேர்தலுடன் ஒப்பிடுகையில் தனித்துப் போட்டி யிட்டுள்ள தமது கட்சி 12 வீதமான வாக்குகளைப் பெற்றுள்ளது என்றார் ரில்வின் சில்வா.

# மொகமட் அசீப் வேகத்தில் திணறியது இலங்கை அணி



கண்டி

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே கண்டியில் நடைபெற்றுவரும் இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி தனது இரண்டாவது இனிங்ஸில் 73 ஓட்டங்களுக்குள் 8 விக்கெட்டுக்களை இழந்து மிகவும் பரிதாப நிலையில் உள்ளது.

நேற்றுமுன்தினம் ஆட்டநேரமுடிவில் இலங்கை அணி தனது முதலாவது இனிங்ஸில் 8 விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

குலசேகர 11 ஓட்டங்களுடனும், மலிங்க ஓட்டமெதையும் பெறாமலும் நேற்றைய ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

இதில் குலசேகர 13 ஓட்டங்களுடன் அசீப் வீசிய பந்தில் போல்டானார்.

இறுதியாக முரளிதரன் களமிறங்க, மறுமுனையில் நின்ற மலிங்க 9 ஓட்டங்களைப் பெற்று கனேரியா வீசிய பந்தை அப்துல் ரசாக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதனால் இலங்கை அணி தனது முதலாவது இனிங்ஸில் 279 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது. முரளிதரன் 1 ஓட்டத்துடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் அசீப் 6, கனேரியா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து பாகிஸ்தான் அணி களமிறங்கியது. இம்ரான் பர்ஹறத்தும், கம்ரன் அக்மலும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.

இவர்கள் அணிக்கு நல்ல தொடக்கத்தை அளித்தனர். ஸ்கோர் 57 ஐத் தொட்டபோது - இம்ரான் பர்ஹறத் 23 ஓட்டங்களைப் பெற்று குலசேகர வீசிய பந்தை ஜெயசூர்யவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.



இதன்போது ஜெயசூர்ய கையில் பலத்த காயத்துக்குள்ளாகி இரத்தம் பீறிட்ட நிலையில், வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

அடுத்து யுனுஸ்கான் களமிறங்கினார். சற்று நேரத்தில் 33 ஓட்டங்களைப் பெற்றிருந்த அக்மல் முரளி வீசிய பந்தை ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் களமிறங்கிய மொகமட் யூசுப் - 17 ஓட்டங்களைப் பெற்று முரளிதரனின் பந்தில் போல்



டானார்.

தொடர்ந்து இன்சமாம் களமிறங்க, 7 பவுண்டரிகள் அடங்கலாக 35 ஓட்டங்களைப் பெற்றிருந்த யுனுஸ்கான், மஃரூப் வீசிய பந்தை சமரவீரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து களம் புகுந்த பைசல் இக்பால் 5 ஓட்டங்களுடனும், அப்துல் ரசாக் 4 ஓட்டங்களுடனும் முரளியின் பந்தில் ஆட்டமிழந்தனர்.

இந்தநிலையில் இப்திகார் களமிறங்க, இன்சமாம் 15 ஓட்டங்களுடன் ரன் அவுட்டானார்.

பின்னர் களமிறங்கிய உமர் குல் 4 ஓட்டங்களுடனும் குலசேகரவின் பந்திலும், அசீப் ஓட்டமெதையும் பெறாமல் ரன் அவுட் முறையிலும், கனேரியா 4 ஓட்டங்களுடன் சங்காரவின் முரளிதரனின் பந்திலும் ஆட்டமிழந்தனர்.


இதனால் பாகிஸ்தான் அணி 170 ஓட்டங்களை மட்டும் பெற்று ஆட்டமிழந்தது.

பந்துவீச்சில் முரளிதரன் 5, குலசேகர 2, மஃரூப் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து இலங்கை அணி தனது இரண்டாவது இனிங்ஸில் ஆடத்தொடங்கியது. ஜெயசூர்ய காயமுற்றதால்- தரங்கவும், சங்ககாரவும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.

இரண்டாவது இனிங்ஸிலும் அசீப்பின் வேகத்துக்கு இலங்கை அணியினர் தடுமாறினர். இதன்படி தொடக்க ஆட்டக்காரர்களான தரங்க 12, சங்ககார 16 ஓட்டங்களுடன் அசீப்பின் பந்தில் போல்டாகி வெளியேறினர்.

அடுத்து ஜெயவர்த்தனவும், சமர



வீரவும் இணைந்தனர். ஆனால், சமரவீரவையும் 4 ஓட்டங்களுடன் அசீப் வெளியேற்றினார்.

அடுத்து டில்ஷான் களமிறங்க, 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஜெய



வர்த்தன, அப்துல் ரசாக்கின் பந்தில் போல்டானார்.

பின்னர் மஃரூப் களமிறங்கி 1 ஓட்டத்துடன் அசீப்பின் பந்தில் ஆட்டமிழக்க, பண்டார களமிறங்கினார்.

இந்தநிலையில் டில்ஷான் 11 ஓட்டங்களைப் பெற்று அசீப் வீசிய பந்தை கம்ரன் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களம் குலசேகர களம் புக, 4 ஓட்டங்களைப் பெற்றிருந்த பண்டார, அப்துல் ரசாக்கின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து மலிங்க களமிறங்கினார். அந்தவேளை, 6 ஓட்டங்களைப் பெற்றிருந்த குலசேகரவும் அப்துல் ரசாக்கின் பந்தில் ஆட்டமிழந்தார்.

நேற்றைய ஆட்டநேரமுடிவில் இலங்கை அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 73 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்தது. மலிங்க ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழக்காதி

## ரேர்கி கிண்ண போட்டியில் வெற்றிபெற்றது யங்ஸ்ரார்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களிடையே நடத்திவரும் 50 ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதல் சுற்று ஆட்டமொன்றில் தெல்லிப்பளை கிறாஸ்கொப்பர்ஸ் அணியை, சுன்னாகம் யங்ஸ்ரார் அணி 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிகொண்டது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் சனிக்கிழமை நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் அணி 26 ஓவர்களில் 96 ஓட்டங்களை மட்டும் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் துஷ்யந்தன் 41, குகதாஸ் 12, சசிவர்மன் 8 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். 25 ஓட்டங்களை கிறாஸ்கொப்பர்ஸ் அணியினர் விட்டுக் கொடுத்திருந்தனர்.

பந்துவீச்சில் புவனேசன் 4, சிறிதரன், திலீபன் ஆகியோர் தலா 2, ராஜகாந்தன், அச்சுதன் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணியினர் 22 ஓவர்களில் 77 ஓட்டங்களை மட்டும் பெற்றமையால், 19 ஓட்டங்களால் யங்ஸ்ரார் அணி இந்தப் போட்டியில் வெற்றிபெற்றது.

இதில் பிரகலாதன் 17, புவனேசன் 9, றொகான் ராஜசிங்கம், ராஜகாந்தன் ஆகியோர் தலா 7, கிருபாகரன் 6 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சுஜீவன், கார்த்தீபன் ஆகியோர் தலா 4, சதீஸ்கண்ணா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (58)

## சச்சின் பழைய நிலைக்கு திரும்புவார் என்கிறார் லாறா

சென்னை



டெண்டுல்கர் கிரிக்கெட் ஆட்டத்தில் மீண்டும் நல்ல நிலைக்குத் திரும்புவார் என்று மேற்கிந்திய நட்சத்திர வீரர் லாறா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

லாறா நேற்றுமுன்தினம் சென்னையில் உள்ள எம்.ஆர்.எப் நிகழ்ச்சியில் பங்கேற்றார். பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது -

ஆட்டத்திறன் என்பது தற்காலிகமானது. ஆட்ட தரம் என்பது நிரந்தரமானது. டெண்டுல்கர் சிறந்த தரமான ஆட்டத்துக்குச் சொந்தக்காரர். அவர் தற்போது சந்தித்துள்ள சரிவிலிருந்து மீண்டு ஆட்டத்தில் நல்ல நிலைக்குத் திரும்புவார்.

இந்திய அணியின் மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப்பயணத்தை ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கிறேன். அந்தத் தொடர் மிகவும் விறுவிறுப்பாக இருக்கும். கப்டன் பதவியில் ராவிட் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறார்.

உலகக் கிண்ணப் போட்டியை ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கிறோம். அந்தப் போட்டி மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் ஆட்டத்தை வளர்க்க உதவும். எனது ஆட்டம் அணிக்கு சொத்தாக இருக்கிறது என்று எண்ணும்வரை ஆட்டத்தில் நீடிப்பேன். தற்போது நல்ல உடல் தகுதியுடன் இருக்கிறேன்.

முன்பு மிகச் சிறந்த அணியாக விளங்கிய எங்கள் அணி தோல்வி கண்டுவருவது வருத்தம் அளிக்கிறது. எனது ஆட்டம் அணியின் வெற்றிக்கு உதவினால அதிக மகிழ்ச்சி அளிக்கும். மேற்கிந்தியத் தீவுகள் முதல் நிலைக்கு மீண்டும் உயரவேண்டும் என்று விரும்புகிறேன் என லாறா கூறினார்.

## 3ஆவது டெஸ்ட் போட்டியிலும் வென்றது அவுஸ்ரேலிய அணி





ஜொகனஸ்பேர்க்

அவுஸ்ரேலிய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே ஜொகனஸ்பேர்க்கில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 2 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

### விளையாட்டு

முன்னதாக தென்னாபிரிக்க அணி தனது முதலாவது இனிங்ஸில் 303 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

பின்னர் அவுஸ்ரேலிய அணி தனது முதலாவது இனிங்ஸில் 270 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

தொடர்ந்து தென்னாபிரிக்க அணி தனது இரண்டாவது இனிங்ஸில் மூன்றாம் நாள் ஆட்டநேரமுடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றது.

இதனால் 292 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்ரேலிய அணி தனது இரண்டாவது இனிங்ஸில் ஆட களமிறங்கியது.

ஹைடனும், ஹுசேயும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர். இதில் ஸ்கோர் 0ஆக இருந்தபோதே- ஹைடன் என்ரினியின் பந்துவீச்சில் டி-வில்லியர்ஸிடம் பிடிகொடுடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து பொண்டிங் களமிறங்கினார். அவர் 20 ஓட்டங்களைப் பெற்று கலிஸ் வீசிய பந்தை பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். மறுமுனையில் ஹுசே சிறப்பாக ஆடிக்கொண்டிருந்தார்.

இந்தநிலையில் மார்ட்டின், ஹுசேயுடன் இணைந்து கொண்டார். அவர்கள் இருவரும் சிறப்பாக ஆடி மூன்றாவது விக்கெட்டுக்காக 165 ஓட்டங்களைப் பெற்று அணியை வலுப்படுத்தினர்.

இந்தநிலையில் 12 பவுண்டரிகள் அடங்கலாக 89 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஹுசே, போஜே வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து சைமன்ஸ் களம் புகுந்தார். அவர் 4 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 29 ஓட்டங்களைப் பெற்று கலிஸ் வீசிய பந்தை பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய கில்கிறிஸ்ட் ஓட்டமெதையும் பெறாமலும், வோன் 3 ஓட்டங்களைப் பெற்றும் என்ரினி வீசிய பந்தை பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தனர்.

அவர்களையடுத்து லீ களமிறங்கினார். அந்தவேளை, 13 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 101 ஓட்டங்களைப் பெற்றிருந்த மார்ட்டின், பொலக் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ஸ்ருவர்ட் கிளார்க் 10 ஓட்டங்களைப் பெற்று என்ரினி வீசிய பந்தை பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.


அடுத்து கஸ்பரோவிச் களமிறங்கினார். இறுதியாக 8 விக்கெட்டுக்களை இழந்து 294 ஓட்டங்களை அவுஸ்ரேலிய அணி பெற்று - 2 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

லீ 24, கஸ்பரோவிச் 7 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.


இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரை 3-0 என்ற அடிப்படையில் அவுஸ்ரேலிய அணி முழுமையாகக் கைப்பற்றியது.

பந்துவீச்சில் என்ரினி 4, கலிஸ் 2, பொலக், போஜே இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை




1) சுரேஸ் பின்வரும் பொருட்களை குறிப்பிட்ட எண்ணிக்கையில் சேகரித்து வைத்திருந்தான். அவன் சேகரித்து வைத்திருந்த மாம்பழங்களின் எண்ணிக்கையைக் காட்டும் உரோமன் எண் யாது?




........................................................................................................

2) இலைகளின் எண்ணிக்கையை உரோமன் எண்ணில் தருக?


........................................................................................................

✳ தரப்பட்ட வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள புள்ளிக் கோட்டில் குறிப்பிட்ட இடத்தை இடுவதன் மூலம் பொருளுடைய மூன்று சொற்களை ஆக்க முடியும். அவ்வாறு மூன்று சொற்களையும் ஆக்க பொருத்தமான இடத்தைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக?

3)




(1) ம (2) க (3) த




(1) வ (2) அ (3) ப

✳ கீழே சில சொற்களைக் குறிக்கும் இரகசியக் குறியீடுகள் எவை எனத் தெரிந்து அவற்றின் இலக்கங்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

4) இது மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொல் ஆகும். முதலெழுத்து பலத்தில் உண்டு குலத்தில் இல்லை. இரண்டாம் எழுத்து மணத்தில் உண்டு மனதில் இல்லை. மூன்றாம் எழுத்து கொம்பில் உண்டு கொப்பியில் இல்லை. அந்தச் சொல்லை எழுதுக.

........................................................................................................

✳ 5 ஆம், 6 ஆ ம் வினாக்களில் ஒவ்வொரு கூட்டிலும் இலக்கங்கள் இடப்பட்டுள்ளன. கோலத்தை விளங்கி பொருத்தமான இலக்கத்தை புள்ளிக்கோட்டில் இடுக.

5)

| | | |
|---|---|---|
| 8 | 10 | 12 |
| 6 | 4 | 14 |
| .... | 18 | 16 |

6)

| | | |
|---|---|---|
| 19 | 22 | 25 |
| 16 | 13 | 10 |
| .... | 4 | 7 |

✳ பின்வரும் வினாக்களில் முதலாவது தொடர்பை அவதானித்து அதற்கேற்ப தொடர்புடைய சோடியைத் தெரிவு செய்க.

7) கோழி - முட்டை (1) கட்டில் - பலகை (2) நிலம் - வீடு (3) எருமை - பால்
8) மேசன் - கட்டடம் (1) ஆசிரியர் - மாணவர் (2) வேலை - சம்பளம் (3) தச்சன் - மேசை
9) கிளி - பழம் (1) குருவி - சொண்டு (2) பழம் - விதை (3) குதிரை - கொள்ளு
10) விரல் - நகம் (1) மயிர் - தலை (2) உடம்பு - தோல் (3) மரம் - இலை

11) ஒவ்வொரு மாதப்பிறப்புக்கும் கமலா கோயிலுக்குப் போவாள். மாதப்பிறப்புக் கழிந்து இரண்டு நாட்களின் பின் புதன் கிழமையாயின் மாதப்பிறப்பு எந்த நாள்?
(1) புதன் (2) ஞாயிறு (3) சனி (4) திங்கள்

12) ஒரு பூந்தோட்டத்தில் முதலில் ஒரு அந்தூரியச் செடியும் அடுத்து ஒரு சூரிய காந்தியும் அடுத்து ஒரு செவ்வந்தியும் மாறி மாறி நடப்பட்டது. அந்த வரிசையில் 22வது செடி யாது?
(1) அந்தூரியம் (2) சூரியகாந்தி (3) செவ்வந்தி


13) சதுரக்காணி ஒன்றின் நீளம் 15 மீற்றர். இந்தச் சதுரக்காணியை ஒரு முறை சுற்றிக் கம்பி வேலி அடைப்பதற்குத் தேவையான கம்பியின் நீளம் யாது?
(1) 1 m (2) 60m (3) 80m (4) 225m

14) ஒரு நேர்கோட்டில் 7 கம்பங்கள் நடப்பட்டுள்ளன. அதில் இரு கம்பங்களின் இடைத்தூரம் 8 m எனின் 7 கம்பங்களின் இடைத்தூரம் யாது?
(1) 8m (2) 56m (3) 48m (4) 15m

15) நான் பாடசாலைக்குப் புறப்பட்ட நேரம் 07.15 மணி. பாடசாலை செல்வதற்கு 35 நிமிடங்கள் எடுத்தது. நான் பாடசாலை அடைந்த நேரத்தை மு.ப. நேரத்தில் தருக?
(1) 7.50 (2) 07.50 (3) 8.00 (4) 7.05


✳ கீழே ஒவ்வோர் வினாவிலும் காணப்படும் உருக்களுள் சகல வகைகளிலும் இரண்டு உருக்களுடைய விடையை தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

16)




(1) 1,3 (2) 2,4 (3) 3,2 (4) 3,4

17)




(1) 2,3 (2) 1,4 (3) 1,3 (4) 1,2

18) கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவிலும் இடது பக்கத்தில் உள்ள உருவில் நிழற்றியுள்ள பின்னத்துக்கு சமனான பின்னம் நிழற்றி யுள்ள உருவைத்தந்துள்ள நான்கு விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடுக.



(1) (2) (3) (4)

19) சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.




✡ × ✡ = 9 ஆயின்

✡ + ✡ = இன் பெறுமதி யாது?

(1) 9 (2) 6 (3) 18 (4) 81

20) பின்வரும் கோலத்தைக் கண்டுபிடித்து சரியான விடையைத் தருக.





D யின் முக்கோணியில் வரும் எண்ணைக் கண்டு பிடியுங்கள்?

........................................................................................................

21) மாலை 6 மணிக்குப் புறப்பட்ட விமானம் அடுத்த நாள் காலை 6 மணிக்கு தரை இறங்கியது. அது பிரயாணம் செய்த நேரம் எவ்வளவு?

........................................................................................................

22)



இதில் உள்ள முக்கோணிகள் எத்தனை?

........................................................................................................

23) கந்தானை என்ற சொல் இரகசியக் குறியீட்டைப் பயன்படுத்தி கீழே தரப்பட்டுள்ள முறையில் எழுதப்பட்டுள்ளது.
X +
இதற்கமைய மந்தானை என்னும் சொல் எழுதப்பட்ட முறையைக் காட்டும் விடை யாது?
(1) + (2) X + (3) +⌐ (4) + X

24) கலா பகல் 12க்கு முற்றத்தில் நின்று பார்க்கும் போது அவளின் நிழல் எப்படி இருக்கும்?
(1) பின்பக்கமாக (2) முன்பக்கமாக
(3) காலுக்குக் கிட்ட கட்டையாக (4)காலுக்குக்கிட்ட பெரிதாக

25) ஒரு வண்டியின் சில்லு ஒன்றின் சுற்றளவு 4 மீற்றர் ஆகும். அவன் பாடசாலைக்கு சென்றடையும் போது சில்லு 250 தரம் சுற்றி வந்தது. அவன் சென்ற தூரம் யாது?

........................................................................................................

26) ஒரு நாளை ஒழுங்கு முறைப்படி காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.
(1) காலை- பகல்- மாலை- இரவு
(2) பகல் - மாலை - காலை - இரவு
(3) இரவு- பகல் - காலை - மாலை


27) ஒரு நாட்டின் பருமனின் ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை.
(1) கிராமம் - மாகாணம் - நாடு - உலகம்
(2) கிராமம்- உலகம் - மாகாணம் - நாடு
(3) நாடு - மாகாணம் - உலகம் - கிராமம்

28) ஒரு மரத்தின் வளர்ச்சி முறைப்படி காட்டும் சரியான விடை?
(1) செடி - மரம் - விதை - பூ - காய்
(2) விதை - செடி - மரம் - காய் - பூ
(3) விதை - செடி - மரம் - பூ- காய்

29) (1) மக்கள் மரங்களை வெட்டி அகற்றினர்.
(2) வேலைக்கு வரத் தாமதமாகியது.
(3) பஸ்சுக்கு வரமுடியவில்லை.
(4) மழையுடன் காற்று வீசயது.
(5) ஒரு பெரிய மரம் வீதிக்குக் குறுக்கே வீழ்ந்திருந்தது.
(1) 5,3,4,1,2 (2) 4,5,1,3,2 (3) 4,1,5,2,3

✳ பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய விடைய்யத் தெரிந்து கோடிடுக.


30)



(1) (2) (3) (4)

(1) பக்கம்
(2) கோணம்
(3) கோடு


31)



(1) (2) (3) (4)

(1) சதுரம்
(2) செவ்வகம்
(3) கனவுரு

32)



(1) (2) (3) (4)

(1) செயற்கை
(2) இயற்கை
(3) சுலபம்

✳ பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

கடமை தவறாதே
கண்ணியம் பேணல்
பெரியோர் சொற்கேள்
பெரிய வாழ்வு வாழ்.

33) இங்கு கூறப்பட்ட நற்பழக்க வழக்கம் ஒன்று தருக?
1. கடமை தவறாமை 2. பொய்பேசாமை 3. களவு எடுக்காமை

34) பெரியோர் என்றால்.
1. வயதில் மூத்தவர்கள் எல்லோரும் 2. வயது முதிர்ந்தவர்கள்
3. தள்ளாடும் வயதினர் 4. மாதா, பிதா, குரு, பெரியோர்

35) பதறாத காரியம் சிதறாது என்பது?
1. வேலையை வேகமாகச் செய்தல்
2. சுலபமாகச் செய்தல் 3. அவசரமின்றி வேலையைச் செய்தல்

# தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை

## பகுதி - II

1) பின்வரும் பந்தியை நன்கு வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

பச்சைப்பசேல் என்று இருந்த வயலில் வரம்பு வழியே மெல்ல நடந்தேன். என்னை வரவேற்பது போல் குளிர்ந்த காற்று மெல்ல வருடியது. சுற்றியுள்ள மரங்களில் இருந்து பூக்க ளின் நறுமணம் கமகம என்று வீசியது. முற்றிய நிலையில் உருண்டு திரண்டிருந்த நெற் கதிர்கள் தலைகுனிந்து நிற்கும் சிறுமியைப் போல் இருந்தன. குவியல் குவியலாக வெண்முகில் கூட்டங்கள் ஆகாயத்திலே மெல்ல மெல்ல அசைந்தன. எங்கிருந்தோ வந்த கொக்குக் கூட்டம் இறகுகளை விரித்தபடி வயலுக்குள் இறங்கிய காட்சி வானத்து முகில்கள் நேரடியாகக் கவிழ்ந்து விழுந்தது போல் இருந்தது.

01. இந்தப்பந்தி எப்படியான காட்சிகளைக் கூறுகிறது?
......................................................................................

02. குளிர்ந்த காற்று என்ன செய்வதுபோல் இருந்தது?
......................................................................................

03. நெற்கதிர்கள் யாரைப்போல் இருந்தது?
......................................................................................

04. கொக்குக் கூட்டம் இறங்கிய காட்சி எவ்வாறு இருந்தது?
......................................................................................

05. நடந்தேன் என்பதன் எழுவாய் வடிவைத் தருக?
......................................................................................

06. கம கம என்பது என்ன மொழியாகும்?
......................................................................................

07. இப்பந்தியில் உள்ள அடுக்கு மொழி ஒன்று தருக?
......................................................................................

08. பயனிலை அடைமொழியாக வரக்கூடிய சொல் ஒன்று தருக?
......................................................................................

09. வயல் எவ்வாறு காட்சியளித்தது?
......................................................................................


10. தன்மை வினைச் சொல் ஒன்று தருக?
......................................................................................

2) பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையை எழுதுக?

01. 7வரிசைகளில் 63 கதிரைகள் போடப்பட்டுள்ளன எனின், ஒரு வரிசையில் எத்தனை கதிரைகள் உள்ளன?
......................................................................................

02. கமல், நிமல், சுமன் ஆகிய மூவரும் சேர்ந்து ரூபா 650 பணத்தை பகிர்ந்து கொண்டனர். கமல் அப்பணத்தில் சரி அரைவாசியைப் பெற்றுக்கொண்டான். மற்றைய இருவரும் மீதியை சமனாகப் பெற்றனர். அவர்களில் ஒருவர் பெற்ற பணம் எவ்வளவு?
......................................................................................

03.




இவ்வுருவின் சுற்றளவு யாது?
......................................................................................

04. ஒரு கடையில் 20 மாபிள்கள் உள்ளன. ஒருபிள்ளை ஒவ்வோர் 3 நிமிடத்திற்கும் ஒரு முறை ஒவ்வொரு மாபிளையும் வெளியே எடுத்தது. பிள்ளை 5வது மாபிளை மு.ப 10.45 மணிக்கு எடுத்தது எனின், கடைசி மாபிள் எடுக்கும் நேரம் யாது?
......................................................................................

05. தர்சினி மு.ப 8.45க்கு கொழும்பில் இருந்து புறப்பட்டு பி.ப 12.30 மணிக்கு கண்டியை அடைந்தாள். அவள் பயணம் செய்ய எடுத்த நேரம் எவ்வளவு?
......................................................................................

03) பின்வரும் பொருட்களில் நீரில் மிதக்கக்கூடிய பொருட்களையும் நீரில் தாழக்கூடிய பொருட்களையும் பின்வரும் அட்டவணையில் வரிசைப்படுத்தி எழுதுக.

நாணயம், மரத்துண்டு, ஆணி, பிளாத்திக்கப், செங்கட்டி, தகரமூடி, கண்ணாடித்துண்டு, கரித் துண்டு, மென்பந்து, பூட்டு.

| இல | நீரில் மிதக்கக்கூடியவை | நீரில் தாழக்கூடியவை |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

04) பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. சவர்க்காரம் எளிதில் நுரைக்கும் நீர்?
(1) மென்னீர் (2) வன்னீர் (3) மழைநீர்

02. மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு வேண்டும். உடல் வளர்ச்சிக்குத் தேவையானது?
(1) கொழுப்பு (2) புரதம் (3) மாச்சத்து

03. வாய்கழியில் மாப்பொருள் சமிபாடடைய உதவுவது?
(1) நாக்கு (2) பல் (3) உமிழ்நீர்

04. குறைந்த அட்சரங்களைக் கொண்டதும் உலகில் அனேக மக்களால் பேசப்படும் மொழி
(1) தமிழ் (2) ஆங்கிலம் (3) சிங்களம்

05. புதிய பழங்களில் அதிகம் இருப்பது?
(1) புரதம் (2) மாப்பொருள் (3) விற்றமின்கள்

06. தேசிய மிருகக்காட்சிசாலை அமைந்துள்ள இடம்?
(1) வில்பத்து (2) பேராதனை (3) தெகிவளை

07. சிகிரியா, கிதுல்பவ்வ என்பன எதற்குப் பிரசித்தி பெற்றனவாகும்?
(1) வணக்கதலம் (2) கலைத்துவப்படைப்பு (3) இராசதானி

08. டெங்கு நுளம்புகள் குத்துவது நாளொன்றின் எந்நேரத்திலாகும்?
(1) நண்பகல் (2) இரவு (3) மாலை

09. வைத்தியசாலையுடன் நெருங்கிய தொடர்புடைய வண்டி?
(1) அம்புலன்ஸ் (2) கார் (3) துவிச்சக்கரவண்டி

10. எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா?
(1) அமுதவிழா (2) பவளவிழா (3) மணிவிழா

5) "அ" பகுதிக்குப் பொருத்தமான விடையை "ஆ" பகுதியில் இருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை நடுவே உள்ள கூட்டில் எழுதுக?

| பகுதி "அ" | இலக்கம் | பகுதி "ஆ" |
|---|---|---|
| 01. சந்திரனை அவதானிக்க முடியாத நாள் | ( ) | (1) நீர் |
| 02. பூமியின் 75%மான பகுதி | ( ) | (2) அமாவாசை |
| 03. பருவகாலங்களில் ஒன்று | ( ) | (3) புதன் |
| 04. பூமிக்குக் கிட்ட உள்ள நட்சத்திரம் | ( ) | (4) இளவேனில் |
| 05. கோள்களில் சிறியது | ( ) | (5) சூரியன் |
| 06. கோள்களில் பெரியது | ( ) | (6) செவ்வாய் |
| 07. சிவப்பு நிறம் உள்ள கோள் | ( ) | (7) வியாழன் |
| 08. பூமிசூரியனைச் சுற்றிவர எடுக்கும்நாள் | ( ) | (8) சேர்ஐசாக் நியூட்டன் |
| 09. சந்திரன் முழுமையாகத் தெரியும் நாள் | ( ) | (9) 3651/4 |
| 10. புவியீர்ப்பு விசை | ( ) | (10) பௌர்ணமி |

06) பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குப் பொருத்தமான சிங்களச் சொற்களையும், ஆங்கிலச் சொற்களையும் எழுதுக?

(1) மாமி ........................ ........................
(2) கட்டில் ........................ ........................
(3) சோறு ........................ ........................
(4) ஐந்து ........................ ........................
(5) மாம்பழம் ........................ ........................

07) பின்வரும் வினாக்களில் கூறப்பட்டுள்ள விடயங்கள் சரியாயின் (சரி) எனவும் பிழை யாயின் (பிழை) எனவும் அடைப்புக்குள் எழுதுக.

01. சதுர மொன்றின் பரப்பளவு ஒரு பக்க நீளம் X 4 ஆகும் (.......)
02. இலங்கையின் பிரதான இயற்கைத் துறைமுகம் கொழும்பு (.......)
03. ஒருநாட்டின் தேசியக் கொடியானது தேசிய ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் (.......)
04. சிவப்பு நிறத்தையும் மஞ்சள் நிறத்தையும் கலந்தால் கருநீல நிறம் உருவாகும் (.......)
05. சங்கிலித்தையல், நரம்புத்தையல் என்பன அலங்காரத் தையல் முறைகளாகும் (.......)
06. பாம்பினங்கள் உணவை நன்றாக சப்பி உண்ணும் (.......)
07. பித்தளைப் பொருட்கள் துருப்பிடிக்கும் (.......)
08. கண்டி மேல் மாகாணத்தில் அமைந்துள்ளது. (.......)
09. கோழியின் உட்சுவாசமும் வெளிச்சுவாசமும் கொண்டை மூலம் நடைபெறும் (.......)
10. தாவரம் சூரிய ஒளியை நாடி வளராது. (.......)

08) கீழே உள்ள விலைப்பட்டியலின் படி வினாக்களுக்குரிய விடைகளை உரிய புள்ளிக் கோட்டில் எழுதுக.

**விலைப்பட்டியல் -**

| பொருட்கள் | அலகு | விலை |
|---|---|---|
| றவ்வை | 1 kg | 40.00 |
| அரிசி | 2 kg | 70.00 |
| பால்மா | பை | 140.00 |
| தீப்பெட்டி | 1 டசின் | 72.00 |
| சவர்க்காரம் | 1 கட்டி | 22.00 |
| எண்ணெய் | 1 l | 65.00 |
| துணி | 1 m | 150.00 |

01. ஒரு கிலோகிராம் அரிசியின் விலை யாது? ........................................
02. 6 தீப்பெட்டியின் விலை யாது?........................................
03. விலைப்பட்டியலின் படி சிட்டையில் உள்ள பொருட்கள் வாங்க எவ்வளவு மொத்தப் பணம் தேவை? ........................................
04. 1 1/2 லீற்றர் எண்ணெய் வாங்க எவ்வளவு பணம் தேவை?
......................................................................................
05. 50 cm துணி வாங்க எவ்வளவு பணம் தேவை?
......................................................................................
06. 2 பால்மா பைக்கற்றும் 1 kg அரிசியும் வாங்க எவ்வளவு பணம் தேவை?
......................................................................................
07. கடைக்காரனிடம் 250 ரூபாவைக் கொடுத்த 1 kg றவ்வையும் 1 kg அரிசியும் 1 பால்மாபைக்கற்றும் வாங்கினால் மிகுதிப் பணம் எவ்வளவு கிடைக்கும்?
......................................................................................
08. சிட்டையில் கிலோகிராமில் வாங்கும் பொருட்கள் எவை?
......................................................................................
09. ஒரு சட்டை தைப்பதற்கு 21/2 மீற்றர் துணிக்கும், தையல் கூலியாக ரூபா 75.00 கொடுக்கவேண்டும் எனின் ஒரு சட்டைக்கு எவ்வளவு பணம் செலவாகும்.
......................................................................................
10. ஒரு கிலோகிராம் றவ்வையில் 28 லட்டுக்கள் செய்யலாம் எனில் 21/2 கிலோ றவ்வையில் எத்தனை லட்டுக்கள் செய்யலாம்?
......................................................................................

*விடைகள் - அடுத்தவாரம்.*

*ஆசிரியர்* - T.அம்பிகைபாகன் ஆசிரிய ஆலோசகர்
மேல்மாகாண கல்வித் திணைக்களம். B Ed Spl Trd Tamil.

## சென்றவார விடைகள்...

1) 4 2) 1 3) 3 4) 2 5) 2 6) 3 7) முகவரி 8) 2
9) 1 10) 2 11) 2 12) 3 13) 1 14) 3 15) 3 16) 2
17) 3 18) 1 19) 3 20) 3 21) 1 22) 2 23) பாதசாரிகடவை
24) வாகனங்கள் தரிக்கலாம் 25) ரூபா 6.00 26) 260 நிமிடம் 27) 57
28) 3 29) 2 30)2 31) 1. TREE 2. FRUIT 32)1 கதிரை 2 புத்தகம்
33) தென்மேற்கு 34)3 35) 1 36) 2 37) 3 38) 3

### வினாத்தாள் - 02

1) பரிசளிப்பு விழா 2) கண்டியில் 3) அதிபர்,ஆசிரியர்,மாணவர்
4) பெற்றோர்,பழையமாணவர்,நலன்விரும்பிகள் 5) மத்தியமாகாணம்
6) திரு.சி.மகாலிங்கம் 7) திருமதி மாலதி விக்கினேஸ்வரன் 8) 1HALL 2 PARENTS
9) 1. பாசல 2. சவச 10) 2006.03.20ஞாயிறு பி.ப 2.30 மணி

2) 1) ரூபா48.00 2) ரூபா10.00 3) ரூபா35.00
4) ரூபா 50.00 5) ரூபா25.00 6)ரூபா22.00
7) ரூபா150.00 8) ரூபா35.00 9) X 10) தோடை,மா

3) 1) கிரகம்பெல் 2) ஆசியா 3) தலவாக்கொல்லை 4) பாதரசம் 5) தொங்கு பாலம்
6) பூவும் பிஞ்சும் 7)அல்லும் பகவும் 8) இடிச்சத்தம் 9) பல்லி 10) மழை

4) 1) 2 2) 2 3) 2 4) 2 5) 2 6) 3 7) 3
8) 4 9) 2 10) 3


5) 1) குறடு 2) கைவாள் 3) கத்தரிக்கோல் 4) ஆணிபிடுங்கும் சுத்தியல்

6) 1) ரூபா 85.50 2) 09 45 மணி அல்லது 09.45 மணி
3) XLVI 4) 200 கிராம் 5) 11

7) 1) A = 5 2) B=10 3) C = 4 4) D = 112 ` 5) E = 6

## யாழ்.ஸ்ரான்லி வீதி கொமர்ஷல் வங்கி கிளை திறப்பு விழாவிலிருந்து...





படங்கள் - செல்வா, தயாளன்

# இரு மின்குமிழ்களையேனும் அணைத்து மின்தடையை தவிர்க்க ஒத்துழையுங்கள்!

## வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர்

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டில் தற்போது அதிகரித்துள்ள மின்பாவனையாலேயே இரவில் மின்தடை ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்கவேண்டுமாயின், பாவனையாளர்கள் அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்காகப் பயன்படுத்தும் மின்குமிழ்களின் இரண்டையேனும் ஒளிர விடாது கட்டுப்படுத்தி, ஒத்துழைப்பு வழங்கினால் இரவு நேர மின்தடையை தவிர்த்துக் கொள்ளலாம் என, இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் கேட்டுள்ளார்.

குடாநாட்டில் தற்போது முன்னிரவு வேளைகளில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுகிறது.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் ஊடகவியளாலர்களுக்கு விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறிப்பாக மாலை7 மணி முதல் 9 மணிவரை மின்பாவனை அதிகரிக்கிறது. குடாநாட்டில் மின்தேவையை பூர்த்தி செய்வதற்கு 32 மெகா வாட்ஸ் மின்சாரம் தேவைப்படுகின்றபோதும், எமக்கு 28 மெகா வாட்ஸ் மின்சாரமே கிடைக்கிறது இந்த நிலையில் மின்பாவனையாளரின் கட்டுப்பாடான மின்பாவனை அவசியமாகத் தேவைப்படுகிறது.

குறிப்பாக இந்த நேரங்களில் மோட்டர் மூலம் நீரிறைத்தல், ஒட்டுவேலைகள் செய்தல், மின்சக்தி மூலமான சமையல் என்பவற்றைத் தவிர்ப்பது சிறந்தது. இதன்மூலம் தற்போதுள்ள மின்வெட்டைத் தவிர்த்துக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் இன்றுமுதல் பலிக்களம் ஆற்றுகை

யாழ்ப்பாணம்—

யாழ்.திருமறைக்கலாமன்றம் தயாரித்து வழங்கும் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியான பலிக்களம் ஆற்றுகை - இன்றுமுதல் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை யாழ். திருமறைக்கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

இருநூறுக்கும் அதிகமான கலைஞர்கள் பங்கேற்று நடிக்கும் மிகப்பெரும் அரங்க நிகழ்வான பலிக்களம் ஆற்றுகைக்காக பிரமாண்டமான மேடை அமைக்கப்பட்டுள்ளது. குறிக்கப்பட்ட நாட்களில் மாலை 7 மணிக்கு காட்சிகள் ஆரம்பமாகும் என்றும், பார்வையாளர்கள் மாலை 6.15 மணி முதல் மன்ற அரங்கினுள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் திருமறைக் கலாமன்றம் தெரிவித்துள்ளது.

திருமறைக்கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் அருட்திரு. நீ.மரிய சேவியர் அடிகளாரின் எழுத்துரு, நெறியாள்கையில் தயாரிக்கப்பட்டு முதன் முதலாக 1970 களில் திருமறைக் கலாமன்றத்தால் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்ட பலிக்களம் ஆற்றுகை தொடர்ந்து பல்வேறு ஆண்டுகளிலும் இலங்கையின் பல பகுதிகளிலும், உலக நாடுகள் பலவற்றிலும் திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப்பட்டு அனைவரது வரவேற்புக்களையும், பாராட்டுக்களையும் பெற்ற படைப்பாகும்.

இவ்வாண்டு காலத்துக்கேற்ற மாற்றங்களுடன் மீண்டும் மேடையேற்றப்படவுள்ள பலிக்களம் ஆற்றுகைக்கான நெறியாள்கையை ஏ.ஆர். விஜயகுமார் மேற்கொண்டுள்ளார்.

# கிணற்றில் வீழ்ந்ததால் வயோதிபப்பெண் மரணம்

யாழ்ப்பாணம்—

கிணற்றில் தவறி வீழ்ந்த வயோதிபப் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டு-யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சங்கானையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில்-தொட்டிலடி சங்கானையைச் சேர்ந்த 76 வயதுடைய நவரட்ணம் மாணிக்கம் என்ற வயோதிப பெண்ணே உயிரிழந்தவராவார்.

வீட்டுக் கிணற்றில் தனது தேவைக்காகத் தண்ணீர் அள்ளச் சென்றபோது தவறிக் கிணற்றில் வீழ்ந்ததாகவும், நீண்ட நேரத்தின் பின்னரே கிணற்றிலிருந்து மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவரது சடலம் மானிப்பாய் பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. சடலம் பிரேதஅறையில் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (வ)

# தாதிய உத்தியோகத்தர் இன்மையால் நெடுந்தீவில் நோயாளர்கள் அவதி!

நெடுந்தீவு—

நெடுந்தீவுப் பிரதேச மாவட்ட வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர்கள் இன்மையால், அவசர மற்றும் அவசிய மருத்துவ சேவைகளை நெடுந்தீவில் வைத்தே வழங்க முடியாத நிலையேற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நெடுந்தீவு வைத்தியசாலை - மாவட்ட வைத்தியசாலையாகவுள்ள போதும், இதற்கான ஆளணிகள் நிரப்பப்படாமல் குறைவான உத்தியோகத்தர்களையும், வளங்களையும் வைத்தே தற்போது வைத்தியசேவை இடம் பெறுவதுடன், அவசர சிகிச்சைகளுக்காக நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

இதேவேளை - தற்போது நடைமுறையிலுள்ள மாதம் ஒரு வைத்தியர் நியமனம் போன்று குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் தற்போது சேவையிலுள்ள தாதிய உத்தியோகத்தர்களையும் சுழற்சிமுறையில் மாதமொருமுறையாவது சேவையாற்றும் வகையில் நியமிக்கப்பட்டால், அதன்மூலம் கூடியளவு மருத்துவ சேவைகளைப் பெறக்கூடியதாக இருக்கும்.

எனவே, தாதி உத்தியோகத்தர் ஒருவரை நிரந்தரமாக இல்லாவிட்டாலும், சுழற்சிமுறையிலாவது நியமிக்க [illegible]ரிய அதிகாரிகள் ஆவன செய்யவேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# செஞ்சிலுவை தொண்டர்கள் சேவையில்!

யாழ்ப்பாணம்—

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் 10 பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 19 தொண்டர்கள் - யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலையில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் தொண்டர்களாக சேவையாற்றத் தொடங்கியுள்ளனர். (21)

# வருடாந்த உற்சவம்

மானிப்பாய்—

நெடுந்தீவு மேற்கு நெமுலினி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் இடம் பெறும். (100)

# தேர்த்திருவிழா

மானிப்பாய்—

இளவாலை அருள்மிகு துணைவிழுந்தான் ஆலயத்தின் தேர்த்திருவிழா -எதிர்வரும் 12 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ இராம பாலச்சந்திரக் குருக்கள் தெரிவித்தார்.

மறுநாள் வியாழக்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

❖ ❖ ❖

மானிப்பாய்—

வட்டுக்கோட்டை - சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திர சமேத பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்று, மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

மேற்படி ஆலயத்தின் கொடியேற்றம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (100)


# ஏப்ரல் மாத நிவாரணம் வெள்ளிமுதல் விநியோகம்

யாழ்ப்பாணம்—

புதுவருடப் பிறப்பையொட்டி ஏப்ரல் மாத இலவச உலர் உணவு நிவாரண விநியோகம் யாழ். மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களில் எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதற்கேற்ற வகையில் யாழ். மாவட்ட ப.நோ.கூ சங்கங்கள் தமக்குரிய வழங்கற் கட்டளைகளை இன்று அலுவலக நேரத்தில் பெற்று, நிவாரண விநியோகத்தை உரிய திகதியில் ஆரம்பிக்க அனைத்து முன்னேற்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு யாழ். செயலக புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க செயலகத்தின் உதவிப் பணிப்பாளர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

# தவக்கால நற்சிந்தனை



இன்று நம் நாட்டிலும், மத்திய கிழக்கு, மேற்கு ஆபிரிக்கா போன்ற நாடுகளில் நடக்கும் போர்களும், வன்முறைகளும், உயிர்க்கொலைகளும், அச்சுறுத்தல்களும் நமது பயத்தை மேலும் அதிகரிப்பவையாகவே இருக்கின்றன.

ஆனால், கிறிஸ்தவர்களாகிய நாம் இந்தப் பயம் நம்மை ஆட்கொள்ள இடமளிக்கக்கூடாது. இறை தந்தையின் பேரன்பை அறிந்துள்ள நாம், எல்லா மக்களும் மீட்கப்படவே அவர் விரும்புகிறார் என்பதை அறிவோம். இதற்காகவே தம் ஒரே மகன் யேசுவை இந்த உலகுக்கு அனுப்பி நமக்காக உயிர்விடச் செய்தார்.

அழிவின் நிகழ்ச்சிகளையெல்லாம் அச்சத்துக்குரியதாகவும், நடுக்கத்தக்குரியதாகவும் தென்பட்டாலும் உலகின் அவசரத் தேவைகளை நிறைவுசெய்யக் கிடைத்த வாய்ப்புகளாக கருத இடமுண்டு. புனித பிரான்ஸிஸ் அசிசியார் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தபோது, ஒரு சகோதரர் கேட்டாராம் உலகம் இப்போது முடிவுக்கு வருமென்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்? என்று. உலகம் முடிவுக்குத் தன்னையே எப்போதும் தயாராக வைத்திருந்த அவர் இறையிரக்கத்தில் அதிக நம்பிக்கை கொண்ட அவர், உலகம் இப்போது முடியப்போகிறது என்று தெரிந்தாலும் இப்போது போல இந்தத் தோட்டத்திலேயே தொடர்ந்து உலாவுவேன் என்றாராம். இந்த உறுதிப்பாடு, மனநிலை தான் நமக்கு வேண்டும்.

மோ.தார்சீசியஸ்

# நெடுந்தீவில் வீதி விளக்குகள் பொருத்தும் பணி ஆரம்பம்!

நெடுந்தீவு—

நெடுந்தீவு பிரதேசத்துக்கென இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் வழங்கப்பட்ட சூரிய சக்தி மூலம் இயங்கும் வீதி விளக்குகள் பொருந்தும் பணி தற்போது துரித கதியில் இடம்பெற்று வருகிறது.

சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 35 வீதி விளக்குகள் இந்த நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் நெடுந்தீவில் உள்ள பொதுநிறுவனங்கள், ஆலயங்கள் மற்றும் அரச நிறுவனங்கள், வைத்தியசாலை என்பவற்றுக்கு வழங்கப்பட்டு தற்போது பொருத்தும் பணிகள் இடம்பெறுகிறது.

தன்னியக்க முறையிலேயே மாலை 7 மணி முதல் காலை 6 மணிவரை ஒளிரும் வகையிலே வடிவமைக்கப்பட்ட இந்த விளக்குகள்- மட்டுப்படுத்தப்பட்ட மின்சார விநியோகம் மற்றும் மின்விநியோக மேற்கொள்ளப்படாத பகுதிகளுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# சமுர்த்தி முத்திரைக் கொடுப்பனவு!

நெடுந்தீவு—

நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான பணமுத்திரைக்கொடுப்பனவு இந்த வாரம் முதல் நெடுந்தீவு சமுர்த்தி வங்கிச் சங்கம் ஊடாக வழங்கப்படவுள்ளது.

2005 ஆம் ஆண்டு யூலை தொடக்கம் டிசம்பர் வரைக்குமான ஆறுமாத காலத்துக்குக் கொடுப்பனவு செய்யும் வகையில் சமுர்த்தி வங்கிச் சங்கத்துக்கு நெடுந்தீவுப் பிர தேச செயலகமூடாக நிதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தக் காலப் பகுதிக்கான உணவு முத்திரைக்கான உலர் உணவுப் பொருட்கள் நெடுந்தீவு ப.நோ.கூ.சங்க கிளைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது. (113)

# தவத்திரு ரவிசங்கரின் மஹா சத்சங்கம்

மானிப்பாய்—


உலகப் புகழ்பெற்ற ஆன்மீகக் குருவான தவத்திரு ஸ்ரீலஸ்ரீ ரவி சங்கர் கலந்து கொள்ளும் கானம், தியானம், ஞானம் ஆகிய உள்ளடங்கிய மஹா சத்சங்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.சர்வதேச வாழும் கலை அறநிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு ஜாதி, மத, இன, பாகுபாடின்றி அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (100)

# போராட்ட வரலாற்றில் மாலதி படையணி புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது

## மாலதி படையணிப் போராளி புரட்சிநிலா தெரிவிப்பு





கிளிநொச்சி—

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியவர்கள் மாலதி படையணியினர் என மாலதி படையணி போராளி புரட்சிநிலா தெரிவித்தார்.

2ஆம் லெப் மாலதி படையணியின் முதல் மாவீரர் கப்டன் கோபியின் நினைவு நாளில், மாலதி படையணி போராளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- மாலதி படையணியினர் பல்வேறு தாக்குதல்களில் பங்கு கொண்டு பெரும் வெற்றிகளைப் பெற்றிருக்கின்றனர்.

கப்டன் கோபி 1996ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இதே நாள் யாழ்ப்பாணம் வாதரவத்தைப் பகுதியில் வீரச்சாவடைந்தார். இவரின் பின்னால் இன்று வரைக்கும் 2ஆம் லெப்மாலதி படையணியிலிருந்து ஆயிரத்து 125 போராளிகள் இந்த மண்ணுக்கு வித்தாகியுள்ளனர். இவர்களின் கனவுகளை நாங்கள் ஒன்றிணைந்து நனவாக்குவோம். விடுதலைப்போராட்ட வரலாற்றில் எமது படையணி புதிய ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாலதி படையணியைச் சேர்ந்த புரட்சி நிலா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை- தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றி வைத்தார். மாலதி படையணிக்கான கொடியை தளபதிகளில் ஒருவரான தமிழ்ப்புயல் எற்றி வைத்தார். கப்டன் கோபியின் திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரை போர்ப்பயிற்சிக் கல்லூரி மகளிர் பொறுப்பாளர் அஜந்தி ஏற்றிவைத்தார். திருவுருவப்படத்துக்கான மலர் மாலையை திருமதி. பொன்.தியாகம் அணிவித்தார்.

தொடர்ந்து படையணிப் போராளிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், தாச்சி ஆகிய போட்டிகளின் இறுதிப்போட்டிகள் நடைபெற்றதை அடுத்து இரவு 7மணிக்கு அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

## மாங்குளம் - கரிப்பட்டமுறிப்பு கிராமத்தில் மீண்டும் இயங்கும் திலீபன் மருத்துவமனை

மாங்குளம்—

கடந்த 3 ஆண்டுகளாக மாங்குளம் பிரதேசத்தில் இயங்கி வந்த தியாகதீபம் திலீபன் மருத்துவமனை கடந்த 28 ஆம் திகதி தொடக்கம் மாங்குளம்- கரிப்பட்டமுறிப்புக் கிராமத்தில் இயங்கிவருகிறது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று மாங்குளம் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சரவணன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வின் பொதுச்சுடரை பற்றடம்பன் ஊரக மேம்பாட்டுப் பேரவைத் தலைவரும் மாவீரரின் தந்தையுமாகிய பொ.இரத்தினசிங்கம் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையின் நிர்வாகப் பொறுப்பாளர் கோபால் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து அன்னைபூபதியின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் சர்வேஸ்வரன் ஏற்றி வைக்க, மலர் வணக்க நிகழ்வை கரிப்பட்ட முறிப்பு கமக்கார அமைப்புத் தலைவர் ஜெயக்குமார் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வின் கருத்துரையை மாங்குளம் ஊரக தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சிவானந்தம், கரிப்பட்டமுறிப்பு பாடசாலை உபஅதிபர் சுதர்சன், ஒலுமடு கிராம அலுவலர் சண்முகராஜா ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையைத் திலீபன் மருத்துவமனை நிர்வாகப் பொறுப்பாளர், கரிப்பட்ட முறிப்பு திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர் சோபிதா ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து திலீபன் மருத்துவமனை அபிவிருத்திக் குழு தெரிவும் இடம்பெற்றது. (பூ)

## தபாலகப் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்டத் தபாலகத்தைப் புனரமைப்பதற்கு தபால் திணைக்களத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு தபால் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

8 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இந்தத் தபாலகத்துக்கான கட்டட மதிப்பீட்டு அறிக்கை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (கு)

## வடிகால் புனரமைத்து தருவதாக அரசாங்க அதிபர் உறுதிமொழி

புதுக்குடியிருப்பு—

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையில் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமலிருந்த வடிகால் பிரச்சினையை நிவர்த்தி செய்து தருவதற்கு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமல்டா சுகுமார் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டக் கல்விப்பணிப்பாளர் அரியரட்ணம், தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் - முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து, அரச அதிபர் நேரில் சென்று பார்வையிட்டு இந்த வடிகாலை சிறந்த முறையில் புனரமைத்துப் பிரச்சினையை நிவர்த்தி செய்து தருவதாகப் பாடசாலை அதிபர் செல்வநாயகத்திடம் உறுதியளித்தார். (பூ)

## முல்லைத்தீவில் ஐந்து கிராமங்களில் புனர்நிர்மாண பணிகள் முன்னெடுப்பு

முல்லைத்தீவு—

முல்லைத்தீவில் தெரிவு செய்யப்பட்ட 5 பின்தங்கிய கிராமங்களில் உட்கட்டுமான வளப்படுத்தல் நோக்குடன் ஒருங்கிணைந்த கட்டமைப்பு, மீளமைப்பு மற்றும் மீள் ஒருங்கிணைப்புக்கான ஐ.ஆர்.ஆர்.பி திட்டத்தின் கீழ் ஐரோப்பிய நிதியுதவியுடன் புனர்நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் அம்பாள்புரம் கிராமத்திலும், புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் - வள்ளுவர்புரம் கிராமத்திலும், துணுக்காய்ப் பிரதேசத்தில் - கோட்டைகட்டியகுளம் கிராமத்திலும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் - கரடிப்புலவு கிராமத்திலும், கரைதுறைப்பற்றில் - முறிப்புக்கிராமத்திலும் புனர்நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (கு)



கண்ணிவெடி விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வெண்புறா நிறுவனமும், அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து சுவரொட்டிகள், பதாகைகள் கட்டியுள்ளதைப் படத்தில் காணலாம். (படம் - கனகரவி)

## பெண்கள் உரிமை தொடர்பான கலந்துரையாடல்

மன்னார்—

மன்னார்- மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மினுக்கன் கிராமத்தில் பெண்கள் உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல் கடந்த 30ஆம் திகதி நடைபெற்றது.

மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக உறுதுணையுடன், ரெனிஸ் அகதிகள் பேரவையின் நிதிப் பங்களிப்புடன் மாந்தை மேற்கு அபிவிருத்தி நிறுவனத்தால் மினுக்கன் கிராம முன்பள்ளியில் நடைபெற்ற இந்த நிகழ்வு - மாந்தை மேற்கு அகதிகள் பேரவைத்திட்ட இணைப்பாளர் ராஜேஸ்வரி தலைமையில் நடைபெற்றது.

இதில் பெண்கள் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. (பூ)

## ஐஸ்கட்டி தொழிற்சாலை அமைப்பு

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நன்மைகருதி யு.என்.டி.பி நிறுவனம் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்திற்கு இரண்டு சிறிய ஐஸ்கட்டி தொழிற்சாலைகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது. இதற்கான உபகரணங்கள், மின் பிறப்பாக்கிகள் நேற்று முன்தினம் முல்லைத்தீவுக்கு எடுத்துவரப்பட்டுள்ளன. (கு)

## முல்லைத்தீவு கிராம மக்களுக்கான தற்காப்புப் பயிற்சிகள் ஆரம்பம்

முள்ளியவளை—

முல்லைத்தீவு- முள்ளியவளை கிழக்கு மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி கடந்த 29ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முள்ளியவளை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மைதானத்தில் பயிற்சியாசிரியர் கானரசி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - இன்றைய சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற்துறைப்பொறுப்பாளர் தமிழினி உரை நிகழ்த்தினார்.

இதேவேளை - முள்ளியவளை- பொன்னகர் பாடசாலையிலும் கிராம மக்களுக்கான தற்காப்புப் பயிற்சியும், சமகால அரசியல் பற்றிய கருத்துரைகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் - கருத்துரைகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, முள்ளியவளைக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலீப் ஆகியோர் நிகழ்த்தினர். (பூ)

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

முல்லைத்தீவு- புதுக்குடியிருப்புப் பிரதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கான தற்காப்புப் பயிற்சிகள் கடந்த 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

மாவீரர் எட்வின் பயிற்சிப் பாசறையில் புதுக்குடியிருப்பு வணிகர் கழகத் தலைவர் கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை மாவீரரின் தந்தை இராசதுரை ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியை முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மயூரன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து நிகழ்வின் கருத்துரைகளை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் வேதவனம் ஆகியோர் நிகழ்த்தினர். (பூ)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல் - திருக்குறள்

## நமது நோக்கு

# ரணிலின் கதி!

எதிர்பார்க்கப்பட்டது போலவே, உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் - ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ரணிலின் தலைமைத்துவத்துக்கு எதிராகப் போர்க் கொடி எழுந்திருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்குப் பின்னரே - ரணிலின் தலைமைத்துவம் கேள்விக் குறியாகத்தான் மாறியிருந்தது.

1999ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல்என பத்துக்கும் மேற்பட்ட தேர்தல்களில் ஐ.தே.க தொடர் தோல்விகளைச் சந்தித்தது.

ஐ.தே.கவுக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய விதத்தில் இருந்த உள்ளூராட்சித் தேர்தல்கூட - கடந்த 30ஆம் திகதியுடன் கையை விட்டுப் போய்விட்டது. இதனால் இயல்பாகவே தலைமைத்துவம்மீது நம்பிக்கையின்மை, வெறுப்பு, மாற்றுத் தலைமை குறித்த சிந்தனை என்பன எழுவது இயல்பு.

2005 ஜனாதிபதித் தேர்தலில் ரணில் எதிர்கொண்ட தேல்விக்குப் பின்னர், கட்சியை வழிநடத்த சரியான தலைவர் இவர் அல்ல என்றும்,தலைமைப் பதவிக்கு வேறொருவரை நியமிக்க வேண்டும் என்றும் குரல்கள் எழும்பத் தொடங்கின.

அதாவது, கருஜெயசூரியவை முன்னிறுத்தி ரணிலை ஓரம் கட்டுவதற்கான முயற்சியே அது. சிறையில் இருந்த எஸ்.பி.திஸநாயக்கவின் ஆதரவையும் பெற்ற கரு ஜெயசூரியவுக்குச் சாதகமாக, கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

கட்சியின் சிரேஷ்ட தலைவராக கூடிய அதிகாரங்களுடன் கரு ஜெயசூரிய நியமிக்கப்பட்டார். ஆனால், உள்ளூராட்சித் தேர்தலில் ரணிலின் தலைமையின்கீழ் போட்டியிட்ட ஐ.தே.கவுக்கு பலத்த அடி.

இதன்பின்னர் ரணிலுக்கு எதிராக கட்சிக்குள் போர்க் கொடி உயர்ந்திருக்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் - சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து ரணில் வலிந்து இழுத்துக் கொண்ட எஸ்.பி திஸநாயக்க, மகிந்த விஜேசேகர, ஜீ.எல். பீரிஸ் போன்றவர்கள் தான் இப்போது எதிரணியில் நிற்கிறார்கள்.

அதாவது, ஒட்டகத்துக்கு இடம் கொடுத்தவரின் கதி ரணிலுக்கு நேர்ந்திருக்கிறது. எஸ்.பி.திஸநாயக்க ஐ.தே. கவின் காவலனாக தன்னைக் காட்டிக் கொள்ளத் தொடங்கியிருக்கிறார். மகிந்த விஜேசேகரவின் நிலையும் அதுதான். பீரிஸ் தற்போது ஒதுங்கியே இருக்கிறார்.

இந்தநிலையில் கட்சிக்குள் ரணிலின் தலைமைக்கு பிரதான போட்டியாளராக இருக்கும் கரு ஜெயசூரிய- ரணிலின் வீழ்ச்சி எப்போது நடக்கும் தான் தலைமையைக் கைப்பற்றலாம் என்று காத்திருக்கிறார்.

அந்தவகையில், ரணிலின் தோல்விக்கும், அவரது தலைமைக்கு எதிராக இன்று ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையீனத்துக்கும் காரணம் என்ன என்று பார்க்க வேண்டும்.

கடந்த ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளிவரும்வரை ரணில் சக்திமிகுந்த தலைவராகத்தான் இருந்தார். ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் அவரை செல்லாக் காசு தலைவராக மட்டும் மாற்றவில்லை.

சொந்தக் கட்சிக்குள்ளேயே கேலி பேசப்படும் ஒருவராக மாறினார். இதற்குக் காரணம், அவரது தவறான அணுகு முறையாலும், அரசியல்உபாயத்தாலும் அவர் சந்தித்த பின்னடைவேயன்றி வேறில்லை.

2004இல் கருணா குழுவை உருவாக்குவது, பாதுகாப்பு உள்ளிட்ட செயல்களில் ஈடுபட்டது, பேச்சுவார்த்தை மேசையை புலிகளைப் பலவீனப்படுத்தும் பொறியாகப் பயன்படுத்தியமை என்பனதான் ரணில் செய்த தவறுகள்.

இந்தத் தவறுகளின் விளைவாகவே ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை இழந்து நடுத்தெருவில் நிற்க நேரிட்டது. அதுமட்டுமல்ல, இன்று அவர் கட்சிக்குள்ளேயே அவமானப்படும் நிலைக்குக் கொண்டு வந்ததும் இந்தத் தவறான அணுகுமுறை தான்.

நேர்மையான அரசியல் தலைவராக பேச்சு மேசையில் ரணில் நடந்துகொள்ளத் தவறியதுடன் - தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை சிதைக்க குறுக்கு வழியை நாடியதன் விளைவை அவர் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறார்.

இதுபோலவே இன்றைய ஜனாதிபதி மகிந்தவும் முயற்சிகளை எடுப்பாரேயானால் - ரணிலுக்கு ஏற்பட்ட கதி நிச்சயம் அவருக்கும் வெகுவிரைவில் ஏற்படும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

நாடும் நடப்பும்




# ஆயுதக்களைவை தவிர்க்க மெள்ள மெள்ள கருணா குழு நகர்த்தும் அரசியல் தந்திரங்கள்

## ஊர்சுற்றியார் பார்வையில்

"கள்ளர், மறவர், கனத்ததோர், அகம்படியர் மெள்ளமெள்ள வந்து வெள்ளாளர் ஆகிடுவர் என்றொரு பழமொழியை" பாட்டு மாதிரிச் சொல்லும் பழக்கம் - இப்போதும் தமிழ் நாட்டில் பல இடங்களிலும், நம்நாட்டின் சில இடங்களிலும் இருக்கிறது.

இது சாதிப்பாகுபாட்டைக் குறிப்பதாக இருந்தாலும், வெவ்வேறு காரணங்களுக்காக ஒதுங்கி மறைந்திருந்தவர்கள் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள முன்வரும்போது இந்தப் பழமொழியை எடுத்துச் சொல்வது இன்னும் பழக்கத்திலிருக்கிறது.

விடுதலைப்புலிகளின் நம்பிக்கைக்குரிய ஒரு தளபதியாக இருந்து கோடரிக்காம்பாகமாறி அரச படைகளின் பாதுகாப்புடன் இருக்குமிடம் தெரியாமல் இருந்த கருணாவுடன் - அரசு பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென்று அந்த நேரம் சிலர் யோசனை தெரிவித்திருந்தனர்.

கருணா குழுவுக்கும் தங்களுக்கும் எந்தத் தொடர்புமில்லையென்று படைத்தரப்பினரும் சொல்லிவந்தனர். படையினரின் கட்டுப் பாட்டுப் பகுதிகளில் கருணாகுழு என்று எந்தக் குழுவும் இல்லையென்று படைத்தரப்பினர் சொல்லி வந் தனர். சில மாதங்களுக்குமுன் ஆயுதக்குழுவொன்று கருணா குழுவைச் சேர்ந்ததென்று ஆங்கிலவார இதழொன்று புகைப் படங்களுடன் கட்டுரை வெளியிட்டு அம்பலப்படுத்தியது.

ஜெனிவாவில் கடந்த மாதம் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும், விடுதலைப் புலிப் பிரதிநிதிகளுக்குமிடையில் நடந்த சந்திப்பில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப்பகுதிகளிலுள்ள குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. இதன்பின்னர் இந்தப் பகுதிகளில் தங்கள் இருப்பை கருணா குழுவும் மற்றும் சில மர்மக் கும்பல்களும் வெளிக்காட்டப் பல வழிகளிலும் முயற்சி செய்கின்றனர்.

வாழைச்சேனையில் படையினரின் உதவியுடன் கிராமங்களில் மக்களைச் சுற்றிவளைத்து மிரட்டியது இதில் ஒரு அம்சம். இப்போது கருணா குழுவின் சார்பில் முஸ்லிம்களுக்காக அறிக்கை விடுத்திருப்பது மற்றோர் செயலாகும்.

இடம்பெயர்ந்த முஸ் லிம்களின் இடத்தில் குடியிருப்பவர்களை வெளியேறுமாறும், அவர்களுடைய சொத்துக்களைத் திருப்பி ஒப்படைக்க வேண்டு மென்றும் இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறதாம் என்று நண்பர் பரதேசியார் மூச்சு விடாமல் சொல்லிநிறுத்தினார்.

அதுசரி, கிழக்கிலிருந்து வடக்குத் தமிழர்களை பயணச் செலவுக்குக் கூட காசு கொடுக்காமல் கடைகளைப் பூட்டித் திறப்புக்களைத் தங்களிடம் கொடுத்துவிட்டு வெளியேறச் சொன்ன கருணா குழுவினர் - இப்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து விடுதலைப் புலிகளால் வெளியேறச் சொன்ன முஸ்லிம்களுக்காகக் குரல் கொடுத்துத் தலையை நீட்டியிருக்கிறது. இதுஎன்ன அரசியல் விளையாட்டு என்று விளங்கவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் வீடுகளிலும், காணிகளிலும் இருப்பவர்கள் அவற்றை விட்டு ஒரு மாதத்துக்குள் வெளியேற வேண்டுமென்றும், இல்லையேல் - அவற்றில் குடியிருப்பவர்களைக் கொல்லப்போவதாகவும் தெரிவித்திருக்கிறார்கள் என்று பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு ஆங்கிலத் தினசரியொன்று முதல் பக்கத் தலைப்புச் செய்தியாக இதை வெளியிட்டிருக்கிறது. விடுதலைப் புலிகளை இதற்காக வேட்டையாடப் போவதாகக் கருணா குழுவைச் சேர் ந்த ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

ஜெனிவா மாநாட்டு முடிவுக்கேற்ப ஆயுதக்களைவு மேற்கொள்ளப்படுவதைத் தவிர்க்கவும், தடுக்கவும் கருணா குழுவினர் புதிய தந்திரோபாயத்தைப் பின்பற்றுவதற்கு முன் வந்திருப்பது நன்றாகத் தெரிகிறது. இந்தத் தந்திரோபாயமும் சுயமாக வந்ததா? வேறிடங்களிலிருந்து கிடைத்த் ஆலோசனைகளைத் தொடர்ந்து வந்ததா? என்று தெரியவல்லை.

எப்படித்தெரியும். இந்தத் தந்திரோபாயத்தை வைத்து ஆயுதக்களைவுப் பிரச்சினையைத் தட்டிக் கழித்துவிட்டு கருணா குழுவையும் ஓர் அரசி யல் இயக்கமாகப் பிரகடனப் படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

ஜெனிவா மாநாட்டில் மேற்கொண்ட ஆயுதக்களைவு முடிவைத் தவிர்ப்பதில் எல்லா ஆயுதக்குழுக்களுமே தீவிரமாக முயற்சி செய்கின்றன.

இந்தக் குழுக்கள் யாவும் படைகளின் நிழலிலேயே இருந்து வந்தவைகளாகும். வாழைச்சேனையில் கிராமங்கள் முற் றுகையிடப்பட்டு மக்கள் மிரட்டப்பட்டதும் படைகளின் உதவியுடனேயே நடந்தாகும் என்று நான் சொன்னேன்.

ஆயுதக் களைவுடன் அல்லது அதற்கு முன்னர் மீண்டும் ஒரு மோதலைக் கிழக்கில் ஏற்படுத்துவதற்கு கருணாகுழு ஆயத்தப் படுவதாகத் தெரிகிறது.

முஸ்லிம்களுக்காக கருணாகுழு கண்ணீர் வடிப்பதை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சரியாக அடையாளம் கண்டு, முஸ்லிம் மக்களின் பிரச்சினையை அரசியலாக்க வேண்டாம் என்று கரு ணாவுக்கு ஆலோசனை கூறியி ருக்கிறார்.

கருணாகுழுவும் சரி, மற்ற ஆயுதக்குழுக்களும் சரி இலங்கை அரச படைகளின் முகாம்களுக்குப் பக்கத்திலேயே தங்கள் முகாம்களை அமைத்துப் அவர்களின் பாதுகாப்பில் தங்கிச் செயற்பட்டு வருகின்றன. முன்பு இந்திய அமைதிப் படையுடன் இங்கிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டுச் செல்வதற்கு முன் இந்தக் குழுக்கள் இந்திய முகாம்களுக்கு அருகிலேயே முகாமிட்டிருந்தன.

பின்னர் இந்திய அமைதிப் படையுடன் இந்தியாவுக்குச் சென்று அங்கும் தங்கள் பிழைப்பைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலையில் - இலங்கை திரும்பி இலங்கை அரச படைகளுடன் அவற்றின் நிழலில் நின்று தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில், ஆயுதங்களைக் களைய வேண்டுமென்ற நிலையை இந்தக் குழுக்கள் முறியடிக்க முயற்சி செய்கின்றன. சிறிலங்கா அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மீண்டும் ஒரு போர் மூளாமல் தடுப்பதற்கு நோர்வேயின் அனுசரணையுடன் உலக நாடுகளும் முயற்சி செய்து கொண்டிருக்கின்றன.

இதேசமயம் இருதரப்புக்கும் போர் மூளுவதைத் தவிர்த்தாலும், தடுத்தாலும் கருணாகுழு மற்றும் துணைப்படைகளான ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கு எடுக்கும் நடவடிக்கையின் போதே மோதல் ஏற்படலாம் அல்லது இந்தக் குழுக்கள் வலியவே விடுதலைப் புலிகளைப் போருக்கு இழுக்கவும் கூடும். புலிகளின் ஆயுதங்களைக் களைய வேண்டுமென்று கருணா குழு கேட்கிறது. இதுவும் படைத்தரப்பு சொல்லிக் கொடுத்ததே! என்று பரதேசியார் சொன்னார்.

எப்படியும் ஆயுதக்களைவுக்கு முன் ஒருபோர் தொடங்கும் போல்தான் தெரிகிறது. ஆயுதங்கள் களையப்படும், ஆயுதக் குழுக்களும் ஒழித்துக் கட்டப்படும் என்று சொல்கிறீரா என்று கேட்டேன். இதற்காகத்தான் முஸ்லிம்களையும் தங்கள் பக்கம் ஈர்த்து முஸ்லிம்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்துகிறார்கள் என்று ஓலமிடுவதற்காக கருணா குழுவினர் தந்திரத்தைக் கையாள முனைகிறார்கள் என்று பரதேசியார் சொன்னார்.

கிழக்கில் தொடர்ந்து அரச படைகளுக்கு முஸ்லிம்களைத் தனி அணியாகத் திரட்டுவதற்கு இன்னமும் தொடர்ந்து பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டுவருகிறது.

இதே சமயம் இந்த படைகளுக்கு முஸ்லிம்களைத் தனி அணியாகத் திரட்டுவதற்கு முஸ்லிம்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகையில் - மற்றொரு சாரார் அதை ஆதரித்து வருகின்றனர்.

இப்போது எல்லோருமே முஸ்லிம்களைக் கருத்தில் கொண்டே போர் ஆயத்தங்கள் செய்வதைப் பார்த்தால் - முஸ்லிம்கள் மிக விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டியது மிக அவசியம் என்பது தெளிவு என்று சொல்லி பரதேசியார் நடந்தார்.

# வலுவிழந்து போகும் வலிமைமிக்க ஆயுதம்



டாபுர் அதிவேக தாக்குதல் படகு

கீற்பிட்டிக் கடலில் கடந்த மாதம் மூழ்கிப்போன கடற்படையின் டோறா அதிவேகத் தாக்குதல் படகுடன் சேர்த்து **(Fast Attack Craft - FAC)** இந்த வருட முதல் 3 மாதகாலப் பகுதியில் இலங்கை கடற்படை இரு டோறாக்களை இழந்துள்ளது.

தகவலறிந்த மகிந்த ராஜபக்ச தெற்கில் நடைபெற்றுக் கொண்டிருந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரத்தையும் கைவிட்டு விசேட ஹெலிகொப்டரில் கொழும்பு திரும்பினார். தளபதிகளை அழைத்துப் பாதுகாப்பு நிலையை ஆராய்ந்தார்.

டோறாப் படகானது சிங்கள கடற்படையின் வலிமை மிக்க ஆயுதம். இதைவிட வலிமை மிக்க ஆயுதம் இலங்கையிடம் இல்லையா என நீங்கள் நினைக்கலாம். ஆயுதத்தின் வலிமை அதை உபயோகப்படுத்தும் களத்தையும், புவியியல் அமைப்பையும் எதிரியின் ஆயுதத்தையும் வைத்துத் தான் தீர்மானிக்கப்படுகிறது. அதிக ஆழமற்ற கரையோரங்களும், குடாக்களும் உடைய 21 ஆயிரத்து 700 கிலோ மீற்றர் நீளமான கடற்கரையைக் கொண்ட இலங்கைக் கடற்பிரதேசத்துக்குச் சிறியரக அதிவேகத் தாக்குதல் படகுகளே மிகப் பொருத்தமானவை.

டோறாப் படகானது **(Dapur)** அதிவேகத் தாக்குதல் படகின் மறு சீரமைக்கப்பட்ட வடிவம். 1970 ஆம் ஆண்டில் டாபுர் படகானது அமெரிக்காவால் இஸ்ரேலுக்கு வழங்கப்பட்டது.

இது பலஸ்தீன விடுதலைப் போராளிகளின் ஊடுருவலைப் பெருமளவில் தடுத்ததுடன், அவர்களின் ஏராளமான விசைப்படகுகளையும் தாக்கியழித்தது. எகிப்துடனான 'யோம் கிபுர்' போரின் போது டாபுர் அதிவேகத் தாக்குதல் படகானது செங்கடலில் எகிப்தின் தாக்குதல்களை முறியடித்ததுடன், இஸ்ரேலின் கேந்திர நிலைகளைத் தாக்கத் திட்டமிட்ட எகிப்து கொமாண்டோப் படையினரையும், விசேட நடவடிக்கை மூலம் தாக்கியழித்தது.

டாபுர் படகின் அதீத பங்களிப்பால்அதனை நவீனமயப்படுத்தும் திட்டத்தில் 1988 இல் டோறாப் படகு உதயமாகியது. இது டாபுர் படகை விட அதிக வேகமும், அதிக தாக்குத் திறனும் உடையதால் 'கொட்டும் தேனீ' **(Dvora)** எனப் பெயரிடப்பட்டது. இது இஸ்ரேலின் **Ramta** நிறுவனத்தால் கட்டப்படுகிறது.

டோறா, சுப்பர் டோறா **MK-II**, சுப்பர் டோரா **MK-III** என்பன இப்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 60 தொன் எடைகொண்ட இந்தப் படகு 37 தொடக்கம் 50 கடல்மைல் (50 **Knots**) வேகமுடையது.

பெரும்பாலான கப்பல்கள் இதைவிட வேகம் குறைவானவை. டோறாவானது அதில் உள்ள **Raytheon** வகை ராடர் மூலம் எந்த இலக்கையும் இலகுவாகக் கண்டுபிடிப்பதுடன், மிக இலகுவாகவும், வேகமாகவும் தாக்குதல் எல்லைக்குள் சென்றுவிடக் கூடியது. இதில் பொருத்தப்படும் 30mm , 20 mm பீரங்கிகள் அதிக வேகத்திலும், இலக்கை துல்லியமாகவும் தாக்கக் கூடியவை.

**Surface drive propeller** இருப்பதால் ஆழமற்ற கடற்பகுதிக்கும் இலகுவாக வந்து தாக்குதல் நடத்தக் கூடியது. **Thermal and optical system** கொண்டிருப்பதால், இரவிலும் முழுமையாக இயங்குவதுடன் 5 மைல் விட்டத்துக்குள் உள்ள ஒரு மனிதனைக் கூட நடுஇரவிலும் அடையாளம் காணக்கூடியது. எனவே, பெரும்பாலான நாடுகளில் விசேட கொமாண்டோ நடவடிக்கைகளுக்கு டோறா வகைப்படகுகளே அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

டோறாப் படகில் 20 mm ஒலிகன் பீரங்கி ஒன்றும், 12. 7 mm (0.50 கலிபர்) கனரக இயந்திரத்துப்பாக்கிகள் இரண்டும், சுப்பர் டோறாவில் 30 mm , 20mm பீரங்கிகளுடன் 12.7mm கனரக இயந்திரத் துப்பாக்கிகள் இரண்டும், 84 mm பின்னுதைப்பற்ற பீரங்கி ஒன்றும் பொருத்தப்பட்டிருக்கும்.

இலங்கைக் கடற்படையினர் தமது கனரக ஆயுதங்களுக்கு ஆதரவுச் சூட்டை வழங்குவதற்கு மேலதிகமாக 4-6 வரையான **PK-LMG, GPMG, AK-LMG** வகை இலகு இயந்திரத் துப்பாக்கிகளைப் பொருத்தியுள்ளனர். இரு இளநிலை அதிகாரிகளுடன் 12 மாலுமிகளும் பணியாற்றுவார்கள். இதன் ஆயுத, ஆட்பலத்தைக் கொண்டு இதை ஒரு 'மிதக்கும் மினிமுகாம்' எனவும் அழைப்பார்கள். சீரற்ற காலநிலையிலும், ஆழ்கடலிலும் பயன்படுத்தக் கூடியதுடன், இதன் அலுமினியத்திலான அடிப்பகுதி நீண்டகாலம் பாவிக்கக் கூடியதும், இலகுவாகப் பராமரிக்கக் கூடியதுமாகும்.

இலங்கை அரசு 1980 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் இஸ்ரேலிடம் இருந்து இந்தவகைப் படகுகளைக் கொள்வனவு செய்தது. குமரப்பா, புலேந்திரன் கைது தொடக்கம் புலிகளின் ஆயுதக் கப்பல்கள் மீதான தாக்குதல்கள், ஏராளமான ஈழத்தமிழ், இந்திய மீனவர்களின் படுகொலைகள், இடம்பெயர்ந்து இந்தியா செல்லும் அப்பாவிப் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் என இதன் தாக்குதல் பட்டியல் மிக நீளமானது.

ஆரம்ப காலத்தில் நீருந்து விசைப்படகுகளே ( **Water jet**) குடாக் கடல் மற்றும் நீரேரிகளில் பயன்படுத் தப்பட்டது. 7 மில்லியன் ரூபா பெறுமதியான இந்தப் படகு ஒரு 0.50 கலிபர் துப்பாக்கியுடன், இலகு இயந்திரத் துப்பாக்கியையும் கொண்டது.

1990 ஆம் ஆண்டுகளில் கிளாலிக் கடற்பரப்பில் போக்குவரத்தில் ஈடுபட்ட மக்களைப் படுகொலை செய்ததிலும், மண்டைதீவு குடாக்கடலில் மீனவரைப் படுகொலை செய்ததிலும் இது முக்கிய பங்கு வகித்தது.

தவளை நடவடிக்கையில் 5 படகுகளும், மண்டைதீவில் ஒன்றும், கிளாலி படைத்தளத்தில் 1999 ஆம் ஆண்டில் ஒன்றும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டும், கிளாலியில் கரும்புலித்தாக்குதல் மூலம் பல படகுகள் தகர்க்கப்பட்டதுடனும் நீருந்து விசைப் படகுகளின் யுகம் முடிவுக்கு வந்தது. கைப்பற்றப்பட்ட இந்தப் படகுகள் கடற்புலிகளுக்குப் பலம் சேர்த்ததுடன், இப்போது கடற்புலிகள் நீருந்து விசைப்படகுகளைக் கட்டுவதற்கும் ஏதுவானது.

இதன் பின்பு டோறாவின் பயன்பாடு அதிகரித்தது. ஆனால், 29.08.1993 அன்று பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து முதன் முதலாக டோறாப் படகு கரும்புலித்தாக்குதல் மூலம் அழிக்கப்பட்டதுடன்,டோறாப் படகுகளின் ஆதிக்கம் குறைக்கப்பட்டது. இதுவரை 15 இற்கும் மேற்பட்ட டோறாப் படகுகளை இழந்து நிற்கிறது சிங்களக் கடற்படை. ஆயுதங்களுடன் ஒரு படகின் பெறுமதி 500 மில்லியன் ரூபா அழிக்கப்பட்ட டோறாக்கள் சிங்களத்தின் தற்போதுள்ள 42 அதிவேகத் தாக்குதல் படகுகளுடன் ஒப்பிடும் போது மூன்றில் ஒரு பங்கை விட அதிகம்.

இவை தவிர சிங்கள கடற்படை பல்வேறு வகையான 40 இற்கும் மேற்பட்ட கப்பல்களை மொத்தமாக இழந்துள்ளது. இது கடற்படையின் மொத்தப் பலத்தில் 50 வீதமாகும். உலகில் இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு 50 வீதமான கடற்படைப் படகுகளை இழந்த வரலாறு இலங்கைக் கடற்படைக்கே உண்டு.

இலங்கை கடற்படையின் தற்போதைய பலம் கட்டளைக் கப்பல்கள் - 02, அதிவேகத் தாக்குதல் படகுகள் - 36, அதிவேக பீரங்கிப் படகுகள் - 06,கண்காணிப்புக் கப்பல் -02, (அமெரிக்கா, இந்தியாவால் வழங்கப்பட்டது) நீருந்து விசைப்படகுகள் - 41, தரையிறங்கு கலங்கள் -10, **sud - chaser -01, Hovercrafts - 02** (இங்கிலாந்திடம் வாங்கப்பட்டது), இஸ்ரேலின் ஏவுகணைக்கப்பல் -02 ( பயன்பாட்டில் இல்லை. கடற்படையின் ஊழலால் பாவிக்க முடியாத கப்பலை வாங்கியுள்ளார்கள்).

பாதுகாக்கும் நடவடிக்கைக்கும் டோறாக்களே பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையின் மிக முக்கியமான கொழும்புத் துறைமுக பாதுகாப்பிலும் டோறாக்களே முக்கிய பங்கு வகிக்கின்றன. 1996 ஆம் ஆண்டு சித்திரையில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கொழும்புத் துறைமுகத்தாக்குதலின் போது அதைத் தடுப்பதில் டோறாக்களின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்தது.

ஈழப்போர் காலப்பகுதியில் திருகோண மலையில் இருந்து முல்லைத்தீவு வரை 6 டோறாக்களும், காங்கேசன் துறையில் இருந்து ஆனையிறவு வரை 6 டோறாக்களும் காவல்பணியில் ஈடுபடவே யாழ். குடா நாட்டுக்கு படையினரின் கப்பல்கள் பயணிப்பதுண்டு.

1999 ஆம் ஆண்டில் புலிகளின் ஆயுதக்கப்பல் முல்லைத்தீவை நோக்கி வருவதாக அரசுக்குத் தகவல் கிடைத்தபோது, வடபகுதிக் கடலைக் கண்காணிக்க இந்தியாவால் கொடுக்கப்பட்ட சயுர கண்காணிப்புக்கப்பலை அனுப்பத் திட்டமிடப்பட்டது. ஆனால், சயுரவைப் பாதுகாக்கக் குறைந்தது 6 டோறாக்களாவது தேவை என்பதால், திட்டம் கைவிடப்பட்டது. அதாவது பெரிய கப்பல்கள் தொடக்கம், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகங்கள், விநியோகப் பாதைகள் வரை டோறாக்களே முக்கிய பங்காற்றுகின்றன.

டோறாக்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த அரசு இஸ்ரேலின் அனுமதியுடனும், ஜப்பானின் தொழில் நுட்ப உதவியுடனும் டொக்யாட் கப்பல் கட்டும் நிறுவனம் 2000 ஆம் ஆண்டு முதல் டோறாப் படகுகளைக் கட்டுகிறது.

இந்தியாவும் 1998 ஆம் ஆண்டில் இஸ்ரேலிடம் இருந்து இரு சுப்பர் டோறாக்களைக் கொள்வனவு செய்ததுடன், 2001 ஆம் ஆண்டில் இஸ்ரேலின் தொழில் நுட்பத்துடன் கோவாவில் உள்ள படகு கட்டும் நிறுவனத்தின் டோறாக்களைக் கட்ட ஆரம்பித்துள்ளது. ஆனால், ஒரு படகு கட்ட 6-12 மாதகாலம் தேவைப்படும், அதாவது டோறாக்களின் இழப்பு உடனடியாக மீள நிரப்பப்பட முடியாதது.

புலிகளைப் பொறுத்தவரை கடந்த காலத்தில் 18 இற்கும் மேற்பட்ட கப்பல்கள் கொண்ட தொகுதியைக் கூட இடை மறித்துத் தாக்குதல் நடவடிக்கை தவிர்ந்த பொதுப்பாவனையில் உள்ள கப்பல்கள், படகுகள் -100.

ஆனால், இவை எல்லாவற்றுக்கும் களமுனையில் முன்னிலையில் நிற்பது டோறாப்படகே ஆகும். பெரிய கப்பல்கள் வேகம் குறைவானதாயும், இலகுவில் களத்தை விட்டு தப்பிச் செல்ல முடியாததாக வும் இருப்பதால், அதன் பயன்பாடு களத்தில் மட்டுப்படுத்தப்பட்டே உள்ளது.

கட்டளைக் கப்பல்களையும், கண்காணிப்புக் கப்பல்களையும், இராணுவ சரக்குக் கப்பல்களையும் தாக்கியுள்ளார்கள். தற்போது கடற்புலிகளின் படகுகள் டோறாவை விட வேகமாக இருப்பதுடன், டோறாவுக்குச் சமமாக 20 **mm**, 30 **mm** பீரங்கிகளையும் கொண்டுள்ளன. அத்துடன் ஆதரவுச் சூட்டுக்கு ஒரே கலத்தைப் பயன்படுத்தாது, பல சிறிய ரக கலங்களையும் இலகு இயந்திரத் துப்பாக்கிகளுடனும், குறைந்த மனித வலுவுடனும் ( பொதுவாக இருவர்) பயன்படுத்துகிறார்கள். கடினமான இலக்குகளுக்குக் கடற்கரும்புலிகளையும் பயன்படுத்துவதால், இப்போது டோறாக்களால் கடற்புலிகளை எதிர்கொள்ள முடிவதில்லை.



சுப்பர் டோறா மார்க் II

கடற்படை அதிகாரிகளின் ஊழல் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட தரம்குறைந்த ஆயுதங்களால் அல்லற்படும் கடற்படைக்கு 15 இற்கும் மேற்பட்ட டோறாக்களினதும் அதனுடன் சேர்ந்த நன்கு பயிற்றப்பட்ட கடற்படையினரதும் தொடர் இழப்புகள் மனவலிமையையும், கடல் வலிமையையும் சிதறடித்துள்ளது. படிப்படியாகத் தமிழீழ கடற்பரப்பில் சிங்கள கடற்படையின் ஆதிக்கம் இல்லாமல் போவதற்கும் இது வழி சமைத்துள்ளது.

உலகில் ஆயுத உற்பத்தித் தரத்தில் முன்னிலை வகிக்கும் இஸ்ரேலினால் மிகச் சிறந்த தொழில்நுட்பத்துடன் தயாரிக் கப்பட்ட முன்னணி களமுனை டோறாப் படகுகள் கடற்புலிகளின் போர்த்திறனின்முன் முடங்கிப் போகின்றன. இது கடற்புலிகளின் பலத்தை உலகறியச் செய்வதுடன், நாலாம் கட்ட ஈழப்போரில் சிங்களக் கடற்படை முற்றாகச் செயலிழக்கப் போவதையும் காட்டுகிறது.

போர் வலுக்குன்றியுள்ள சிங்கள இராணுவத்தின் யாழ். முற்றுகைக்கு ஒரே ஒரு வழங்கல் பாதையான கடலும் புலிகள் வசமாகும் போது , 21 ஆம் நூற்றாண்டில் உலகில் மிகப்பெரும் இராணுவப் பேரழிவைச் சிங்கள தேசம் சந்திக்கப்போவது நிதர்சனம்.

அருஸ் ( வேல்ஸ் )

# இரும்புத் திரைக்குள் உள்ள இரகசியம் வெளியே வருமென்கிறார் வைகோ

சென்னை—

இரும்புத்திரைக்குள் இருக்கும் ஓராயிரம் இரகசியங்கள் வெளியே வருமென இந்திய மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் அனுப்பிய சட்டத்தரணியின் கடிதத்துக்கு சவால் விடுத்து வைகோ உரையாற்றினார். இது தொடர்பாக அவர் பிரசாரக்கூட்டமொன்றில் மேலும் தெரிவித்ததாவது:



கலைஞர், தங்களது படை பரிவாரங்களை ஏவிவிட்டு கடந்த இரண்டு நாட்களாக என் மீது குற்றஞ்சாட்டி வருகிறார். தேர்தல் அறிவிப்பில் கலர் தொலைக்காட்சி கொடுக்கப்போவதாக அறிவித்தார். அவர் வெல்லப்போவதும் இல்லை. அதனால் அவர் கொடுக்கப்போவதும் இல்லை.

ஒரு கிலோ அரிசி 2 ரூபாவுக்கு தருவதாக மக்களை ஏமாற்றுகிறார். நான் விவசாயக்குடும்பத்தைச் சேர்ந்தவன். விவசாயிகளின் கஷ்டங்களை நன்கு அறிந்தவன். எனவே தான், நதிகளை இணைக்கக்கோரி நடைப்பயணம் சென்றேன்.

மத்திய அமைச்சர்களுக்காக பல திணைக்களங்களைக்கேட்டு வாங்கினார்கள். பேரன் இருக்கும் தொழில் தொலைத்தொடர்பு. இதே திணைக்களத்தை நிபந்தனை போட்டு வாங்கினார்கள். மத்திய அமைச்சரவை அமைப்பதற்கு முன்பாக ஆந்திர முன்னாள் முதல்வர் ஜனார்த்தன ரெட்டியிடம் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர். இந்த ஒப்பந்தத்தில் பிரட்டியே தேவையான திணைக்களங்களை வாங்கினீர்களே, எதற்கு குடும்பத்தைக் காப்பாற்றவா?

தமிழ்நாட்டில் எழுச்சி அலை 1971 இல் ஏற்பட்டது போல் தற்போது முதலமைச்சருக்கு ஏற்பட்டுள்ளதை பார்க்க முடிகிறது. 200 இற்கும் மேற்பட்ட தொகுதிகளில் எங்கள் கூட்டணி வெற்றிபெறும்.

கடந்த 2004 நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற எங்களது கட்சியைச் சேர்ந்த 4 எம்.பிக்களை சோனியாகாந்தியிடம் எங்கள் கூட்டு தனிக்கூட்டு என்று சொல்லி அதிக அமைச்சர்களை பேரம் பேசி வாங்கி அரசியல் மோசடி செய்துள்ளார் என கடந்த மார்ச் 6 ஆம் திகதி பேட்டி கொடுத்துள்ளேன். இந்தியாவிலேயே நடக்காத ஒரு அநீதி எங்கள் கட்சிக்கு நடைபெற்றுள்ளது.

குற்றமற்ற என்னைக் கொலைகாரன் என்று குற்றஞ்சாட்டியவர் கலைஞர். மத்திய அமைச்சரவையில் பதவியில் இருக்கும் அவர்கள் நாட்டைப்பாதுகாக்கவா? தங்களது தொலைக்காட்சி சாம்ராஜ்யத்தை பாதுகாக்கவா? தீண்டத்தகாதவனாக என்னைப்பார்த்த தொலைக்காட்சியில் தொடர்ந்து என்னைப் பற்றி கூறிவருவது மகிழ்ச்சியானது தானே. கலைஞர் அவர்களின் பேரன் தயாநிதிமாறன் சட்டத்தரணி கடிதத்தை எனக்கு தொலைநகலில் அனுப்பியுள்ளார்.

அந்தத் தொலைநகலில் முதல் பந்தியில் அவரது சட்டத்தரணி எழுதியுள்ளது என்னவென்றால், எங்கள் கட்சிக்காரர் தமிழகம் முழுவதும் ஏன் இந்தியா முழுவதும் உலக அளவிலும் புகழ் பெற்றவர் என்கிறார். தி.மு.க தொண்டர்கள் ரத்தம் சிந்தி கட்சியை வளர்த்ததனாலே இன்று புகழ் பெற்றவராக அவர் இருக்கிறார்.

அதில் 24 மணிநேரத்தில் நிபந்தனையற்ற மன்னிப்பும், ஒரு கோடி ரூபா நட்ட ஈடாக வழங்கவேண்டும் என்றும் கேட்டுள்ளனர். சூரியன் அஸ்தமனமாகப்போகிறது. அவர்கள் கொடுத்த கெடு முடியப்போகிறது. இந்த வைகோ தூக்கு மேடைக்குக் கூட தலைகொடுக்கத்தான் போவானே தவிர மண்டியிடமாட்டான். மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் அவர்களே சீக்கரம் வழக்குப்போடுங்கள்.

இரும்புத்திரைக்குள் உள்ள ஓராயிரம் ரகசியங்களை நான் கொண்டு வருவேன். நானே வழக்கில் வாதாடுவேன். குறுக்கு விசாரணையும் செய்வேன் என வைகோ தெரிவித்தார்.

# இலவச தொலைக்காட்சி வழங்குவது நாளைய கூட்டத்தில் தெரிவிப்பேன்

## என்கிறார் கருணாநிதி

சென்னை—

பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படும் அரிசிக்கான மானியத்தை அரசு அதிகரித்தால் 1 கிலோ அரிசி 2 ரூபாவுக்கு வழங்குவது சாத்தியம் தான் என்று தி. மு.க தலைவர் கருணாநிதி கூறி னார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் -

தி.மு.க தேர்தல் அறிக்கையில் பங்கீட்டு அட்டைக்கு ஒரு கிலோ அரிசி 2 ரூபாவுக்கு தரப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. தற்போது வழங்கப்படும் மானியத்தை சற்று உயர்த்தினாலேயே ஒரு கிலோ அரிசியை 2 ரூபாவுக்கு விற்பனை என்பதை உடனடியாக அமுல் செய்து விடமுடியும்.

ஏழைத்தாய்மார்கள் வீடுகளுக்கு கலர் தொலைக்காட்சி தர முடியுமா என்று சிலர் கேள்வி எழுப்புகிறார்கள்.

. அதை அப்படி அமுல் செய்ய முடியும் என்பதை இன்று சென்னையில் நடக்கும் அனைத்துக்கட்சி தேர்தல் பிரசார ஆரம்பபொதுக் கூட்டத்தில் தெரிவிப்பேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தலின் மையப்பொருளாக வைகோ மாறிவிட்டாராம்

## தினமணி கூறுகிறது

இந்தத் தேர்தலில் அதிகமாகப் பேசப்படுகின்ற செய்திக்கு ஆளாகின்ற தலைவர்கள் கருணாநிதியோ, ஜெயலலிதாவோ அல்ல. வைகோதான்.

திருச்சி தி.மு.க மாநாட்டுச் செய்தியை பின்னுக்குத் தள்ளி, தி.மு.கவினருக்கு ஒரு விதமான (அதிர்ச்சி என்றில்லாவிட்டாலும்) எரிச்சலைத் தந்து, அ.தி.மு.க - ம.தி.மு.க கூட்டணி என்ற செய்தி எல்லா பத்திரிகைகளிலும் முதல் பக்கத்தில் வந்த நாள் முதல் வைகோ இந்தத் தேர்தலின் மையப்பொருளாக மாறிவிட்டார்.

தி.மு.கவுக்கு இந்தளவுக்கு எரிச்சலையும், நெருக்கடியையும் தந்தவர்கள் இரண்டு தம்பிகள். ஒன்று எம்.ஜி. ஆர் அடுத்தது வைகோ.

எம்.ஜி.ஆர் 1972 இல் தி.மு.க தலைவர் கருணாநிதியை விமர்சனம் செய்து, கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.

திரைப்படக் கதாநாயகர் விம்பத்தைக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர் எப்படி கூட்டத்தை இழுத்து நிறுத்தும் சக்தியாகத் திகழ்ந்தாரோ, வைகோவும் தனது பேச்சாற்றலால் அத்தகைய சக்தியாக இருந்தார்.

அந்தளவுக்கு தொண்டர்களை தன் பேச்சாற்றலால் கட்டிப்போட்ட ஒருவரை, ஏதோ ஒரு காரணத்துக்காக தி.மு.க வெளியேற்றியது. சிவகாசி பட்டாசுபோல வெடிப்பாகப் பேசிக்கொண்டிருந்த வைகோவுக்கு அது ஒரு கண்ணீர் தீபாவளி.

எம்.ஜி.ஆரைப் போல வைகோவும் புதிய கட்சி தொடங்கினார். திருச்சியில் நடத்திய முதல் மாநாடு அரசியல் பாசறைகளில் வருத்தத்துடன் விவாதிக்கிற விடயமாக மாறியது. வைகோ தனது அரசியலை கருணாநிதி என்கிற ஒரு ஆளுமைக்கு எதிராக நடத்தியிருந்தால் அவர் எம்.ஜி. ஆரைப்போல வெற்றி பெற்றிருக்க முடியும். ஆனால், அவர் தனது அரசியலை பொதுவான தளத்துக்கு உயர்த்தினார்.

மக்கள் திலகத்தை வெளியேற்றி, கருணாநிதி இருக்கும் இடத்தில் எம். ஜி.ஆரை வைக்க வேண்டும் என்ற வெறியை தனிநபர் ஆளுமை வழிபாட்டினால் மட்டுமே உருவாக்க முடிந்தது. கொள்கை சார்ந்த அரசியல் அல்ல. இதைப் புரிந்துகொள்ளாத வைகோ, கருணாநிதியை தனது நேர் விரோதியாக மாற்றத் தவறிவிட்டார்.

போதாததற்கு, விடுதலைப்புலிகள் ஆதரவு கொள்கை தமிழர்களின் பொதுக் கருத்தாக அமையவில்லை.

உலகத் தமிழர்களின் ஒரே தலைவர் இந்த விடயத்தை மிக நாசுக்காக கையாளுவதைப் புரிந்துகொள்ளாத வைகோ, தான் யாரை எதிர்க்க வேண்டுமோ அவருடனே கூட்டணி அமைத்துக்கொண்டு ஆசனத்துக்காக மன்றாடினார். அண்ணன் காட்டிய வழியில் புலிவாலை நாசுக்காக விட்டுவிட முயன்றபோது புலி பொடாவாக திரும்பி நின்றது.

இந்தத் தேர்தலில் வைகோ எந்த மாற்றத்தையும் செய்ய முடியாது. ஆனால் அவர் எடுத்துள்ள சாதகமான ஒரு முடிவு - தேர்தலில் போட்டியிடாமல் இருப்பதுதான்.

கருணாநிதி போட்டியிட்டே ஆக வேண்டும். அதற்கான நெருக்கடி இருக்கிறது.

போட்டியிடாவிட்டால் யார் முதல்வர் என்ற கேள்வியிலேயே தோல்வி தொடங்கிவிடும். ஆனால், வைகோ போட்டியிடாமல் இருப்பதுதான் அவருக்கு சாதகமானது. இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் தமிழக அரசியலில் மாற்றம் வரும் என்ற நம்பிக்கை வைகோவுக்கு இருக்கிறது. அப்போது ஜெயலலிதா முதல்வராக இருந்தாலும், ஸ்டாலின் முதல்வராக இருந்தாலும் புதிய போர்க்கொடி உயர்த்த எதிலும் பட்டுக்கொள்ளாமல் விரதம் காக்க வேண்டியிருக்கிறது அவருக்கு.


# பணிநிலை வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்களது தன்வரலாறடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 2006.04.12 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

**பணிநிலை**

1. ஆய அலுவலர் (ஆண்கள்)
2. ஆய உதவியாளர் (ஆண்கள்)
3. சமையலாளர் (ஆண்கள்)
4. சமையல் உதவியாளர் (ஆண்கள்)
5. கடின உழைப்புச் சிற்றூழியர் (ஆண்கள்)

**தகைமை**

பணிநிலை
1. க.பொ.த (உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
2. க.பொ.த (சா/த) பரீட்சையில் குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
3. உள்நாட்டு உணவு வகைகள் தயாரிப்பதில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
4. சமையல் உதவியாளர் பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும்.
5. ஆண்டு 07 கற்றிருப்பதுடன், சிற்றூழியர் பணியில் மூன்றாண்டு (03) பட்டறிவு இருத்தல் வேண்டும்.

**வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி**

மேலாளர்,
ஆளணிப்பிரிவு,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

**நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்**

2006.04.12 (புதன்கிழமை)
காலை 10.00 மணி

**நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் :**

நடுவப் பணியகம்,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

குறிப்பு:
* தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.
* நேர்முகத் தேர்வுக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட மாட்டாது. பணிநிலை வேண்டுகைகளை அனுப்பி வைக்காதோரும் தகைமைச் சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிக்கலாம்.

மேலாளர், ஆளணிப் பிரிவு, ஆயப்பகுதி.

(4459)



# IELTS

INTERNATIONAL ENGLISH LANGUAGE TESTING SYSTEM, ESSENTIAL ENGLISH LANGUAGE EXAMINATION FOR HIGHER STUDIES, WORK OR MIGRATION PURPOSES IN U.K.AUSTRALIA, NEW ZELAND, CANADA, USA, ETC.

நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் இங்கு பயிற்சி பெற்று நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். British Council இன் அங்கீகாரம் பெற்ற நிறுவனம். முற்றிலும் புதிய நூல்கள். வேண்டிய நேரம் Listening Practice செய்ய வசதிகள். பேச்சுப் பயிற்சி போன்ற சகல பாட நெறிகளும் British Council - Colombo ன் நடைமுறை போன்றே, சனி,ஞாயிறு நாட்களில் வகுப்புக்கள் இரண்டு Levelகளில் நடைபெறும். அடிப்படையில் இருந்து கற்க விரும்புவோருக்கு STEP UPTO IELTS PROGRAMME, ஏனையவர்கட்கு ADVANCED EXAM - LEVEL PROGRAMME வகுப்புக்கள் 08.04.2006ல் ஆரம்பமாகும். தனியாகவும் குழுவாகவும் வகுப்புக்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.

**SURE RESULT OF BAND 8 OR BAND 9**
CONTACT OR CALL OVER AT
**BRITISH COLLEGE OF ENGLISH**
141, ADIYAPATHAM ROAD, THIRUNELVELY
[திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் நடுவில்]
TP. 0779934783 [C/5198]

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தேர்தல் பிரசாரத்தில் காயமுற்ற ஜே.வி.பி உறுப்பினர் மரணம்

கொழும்பு —

உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்தின்போது காயமடைந்த ஜே.வி.பியின் ஆதரவாளர் ஒருவர் நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

கடந்த 24ஆம் திகதி அனுராதபுர-விஜயபுர சந்தியில் வைத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்களுக்கும், ஜே.வி.பியினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் இருவர் காயமடைந்தனர்.

இதில் ஒருவர் அனுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

படுகாயமடைந்த மற்றுமொருவர் ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தநிலையில் 10 நாட்களுக்குப் பின்னர் படுகாயமடைந்தவர் நேற்று உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, தமது ஆதரவாளர் மீது வடமத்திய மாகாண முதலமைச்சர் துமிந்த திஸநாயக்கவே தாக்குதல் நடத்தியதாக ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

எனினும், அதனை வடமத்திய மாகாண முதலமைச்சர் மறுத்துள்ளார். (01)

# மகிந்தவுடன் வீரவன்ச நீண்டநேரம் சந்திப்பு

கொழும்பு —

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவின்சவுக்கும் இடையிலான திடீர் சந்திப்பொன்று நேற்று முன்தினம் காலை அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் முடிவுகள் குறித்து இருவரும் நீண்ட நேரம் கலந்துரையாடியதாக அலரி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்றத் தேர்தல் குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்தே ஜே.வி.பி போட்டியிடவேண்டும் என்று கட்சிக்குள் வலியுறுத்தி ஆணித்தரமாக நின்றவர் விமல் வீரவன்ச என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, தேர்தல் முடிந்த கையோடு அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்திருப்பது ஜே.வி.பிக்குள்ளும் சலசலப்பை ஏற்படுத்தியிருப்பதாக தெரியவருகிறது. (01)

# வீடுகளைக் கையளிக்காத 3 எம்.பிக்கள் மீது வழக்கு

கொழும்பு —

அரசாங்க உத்தியோகபூர்வ இல்லங்களை உரிய காலத்தில் மீளக்கையளிக்காமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவருக்கு எதிராக மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் லக்ஷ்மன் செனவிரட்ன, ஜயலத் ஜெயவர்த்தன, மற்றும் பி.சந்திரசேகரன் ஆகியோருக்கு எதிராகவே இந்தமனு தாக்கல் செய்யப்பட்டது.

பொதுநிர்வாக அமைச்சின் நிறுவன அத்தியட்சகர் இந்த மனுவை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

இந்தமனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஆஜராகியிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரட்ன ஐயாயிரம் ரூபா ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டார்.

எனினும், நேற்று நீதிமன்றில் சமூகமளிக்காத நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜயலத் ஜெயவர்த்தன மற்றும் பி.சந்திரசேகரன் ஆகியோரை எதிர்வரும் ஜூன் 27ஆம் திகதி ஆஜராகுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (01)

# துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு சென்றவரைக் காணவில்லை!

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம் —

வலி.வடக்கில் உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு வழிபாட்டுக்குச் சென்றவரை காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கந்தரோடை - கந்தையா வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த வீரசிங்கம் சதீஸ்குமார் (வயது 25) என்பவரே காணாமல்போயிருப்பதாக உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

கடந்த ஞாயிற்றுக் கிழமை தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்துக்குச் சென்றுவிட்டு வருவதாக கூறிச் சென்றவர் இதுவரை வீடுதிரும்பவில்லை என்றும், அவரைத் தேடி ஆலயத்துக்கு சென்றவேளை-அவர் சென்ற சைக்கிள் அங்கு இருந்ததாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ, நி)

# ஷாபி நகர் பிரதேசத்தில் புலிகளின் புதிய முகாமாம்

## குற்றம் சாட்டுகிறது படைத்தரப்பு

கொழும்பு —

மூதூர் - ஷாபி நகர் பிரதேசத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தெற்காக அமைந்துள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான உப்பூரல் பகுதியில் விடுதலைப்புலிகள் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளதாக பாதுகாப்பு தரப்பு குற்றம் சாட்டியுள்ளது.

நாளாந்தம் 10 முதல் 15 தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த முகாமை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் எழிலனை தொடர்பு கொண்டபோது - தமிழீழ விடுதலைப்புலிகளின் முகாம் ஒன்று ஏற்கனவே இந்த இடத்தில் இருந்தது. இந்தநிலையில் அதனை ஒழுங்குப்படுத்தும் நடவடிக்கைகளே தற்போது இடம்பெற்றுவருவதாக தெரிவித்தார். (01)

# தோலகட்டி ஆச்சிரம முனிவருக்கு ரோமில் 'இறை அடியான்' பட்டம்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வில் பிறந்து தோலகட்டியில் ஆச்சிரமத்தை நிறுவி அதன் கிளைகளை இலங்கையிலும், இந்தியாவிலும் நிறுவி அருட்பணி செய்த தோலகட்டி முனிவர் என அழைக்கப்பட்ட வண. தோமஸ் அடிகளாருக்கு கத்தோலிக்கரின் உயர் சபையான ரோம் இறைஅடியான் என்ற பட்டத்தை வழங்கியுள்ளது.

1886 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வில் பிறந்து கத்தோலிக்க மதத்தில் இருந்து கொண்டு இவருடைய காலத்தில் இருந்த சாதிக்கொடுமை, மதவேற்றுமைகளை ஒழித்து, அனைவரும் ஒரே இறைவனின் மக்கள் என ஏற்றுக்கொண்டு ஒற்றுமையுடன் வாழ்வதற்கு வழிகாட்டிய இவர் 1964 ஆம் ஆண்டு இறைபதமடைந்தார்.



இவரின் அருட்பணியை பாராட்டி இறையடியான் என்ற கௌரவத்தை வழங்கியுள்ள ரோம், இவரை புனிதர் நிலைக்கு உயர்த்த ஆய்வுகளை மேற்கொள்ளலாம் என யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்துக்கு அறிவித்துள்ளது.

இலங்கையில் வண. தோமஸ் அடிகளாரே முதன்முறையாக இறையடியான் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவராவார்.

இவரை புனிதர் என்ற நிலைக்கு உயர்த்துவதற்கான ஆய்வுகளின் ஒரு பகுதியாக அவர் பற்றியும், அவரது அருட்பணி பற்றியும் சாட்சி கூற விரும்புபவர்கள் நாளை காலை 9 மணிமுதல் 12 மணிவரை ஆயர் இல்லத்தில் வழங்கமுடியும் என்றும், அவர் பற்றி அறிந்த வயோதிபர்கள் இருப்பின் அவர்களை அழைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என யாழ். ஆயர் இல்லம் அறிவித்துள்ளது.

# மாணவர்கள் கைது

திருகோணமலை —

திருகோணமலை - செல்வநாயகபுரம் மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்கள் இருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உப்புவெளி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

செல்வநாயகபுரம் - ஆனந்தபுரத்தைச் சேர்ந்த மகேந்திரன் தினேஷ்வரன் (வயது 19), மங்காவு ரவீந்திரன் (வயது 18) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இந்தக் கைது தொடர்பாக பொலிஸார் தெரிவிக்கையில் -

செல்வநாயகபுரம் மகாவித்தியாலயத்தின் பின்புறமாக பற்றை ஒன்றுக்குள் இருந்துவந்த இளைஞர்களை தாம் கைது செய்துள்ளதாகவும், கைது செய்யப்பட்ட இருவரும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள். இருவரிடமிருந்து 9 மில்லி மீற்றர் கைத்துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றியதாக தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக திருகோணமலை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# கூலுக்கு வாக்களித்தோர் துரோகிகள் என்கிறது சுவரொட்டி

யாழ்ப்பாணம் —

யாழ்.பலகலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் தெரிவில் வாக்களித்த பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்களில் 19 பேரின் படங்களுடனும், ஐவரின் மண்டை ஓடுகளுடனும் கொண்ட சுவரொட்டிகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒட்டப்பட்டிருந்தன.

தேசப்பற்றுள்ள யாழ்.பல்கலைக் கழக சமூகம் என்ற பெயரில் வெளியிடப்பட்ட இந்தப் பிரசுரத்தில் - நம்முள் மறைந்திருக்கும் 15 துரோகிகள் யார்? அடையாளம் கண்டு தண்டனை வழங்குவோம்.

மேலும் படத்தின்கீழ் மேற்குறிப்பிட்டவர்களில் பேராசிரியர் கூலுக்கு வாக்களித்த 15 துரோகிகளும் உடனடியாக பல்கலைக்கழக பேரவையை விட்டு வெளியேறவும். இல்லையேல் அவர்கள் அடையாளம் காணப்பட்டு அதிகபட்ச தண்டனை மிக விரைவில் வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஈ.பி.டி.பி தெரிவை எதிர்த்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல்!

முல்லைத்தீவு —

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு ஈ.பி.டி.பியினர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதை எதிர்த்து சுயேட்சைக் குழுவினர் நீதிமன்றில் வழக்குத் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

சுயேட்சைக் குழுவின் தலைவர் எஸ்.ரவிச்சந்திரன் மற்றும் முன்னாள் கிராம அலுவலர் வி.பரமலிங்கம் ஆகியோர் இந்த வழக்கைத் தாக்கல் செய்தனர்.

ஈ.பி.டி.பியினரது வேட்பு மனுக்களை வவுனியா மற்றும் முல்லைத்தீவு பிரதேச சபை செயலர்கள் ஏற்றுக்கொண்டதையும், சுயேட்சைக் குழுவினரது வேட்பு மனுக்களை நிராகரித்ததையும் செல்லுபடி அற்றதாக அறிவிக்கக்கோரி இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீண்டும் முத்திரை வரி நேற்று முதல் அமுல்

கொழும்பு —

முத்திரை வரி நேற்றுமுதல் மீண்டும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக வரி அறவீட்டு கொள்கை தொடர்பான ஆணையாளர் எச்.பீ.ஏ.செனவிரத்ன தெரிவித்தார்.

முத்திரைவரி 2002 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்ததுடன், பின்னர் அந்த வரி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் இந்த வருடம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் மூலம் முத்திரைவரி மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

அந்தவகையில் நேற்று மீண்டும் அமுலுக்கு வரும் முத்திரைவரியின் மூலம் பெருமளவான வருமானத்தை ஈட்ட அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (01)

## நோர்வேயின்...

நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் உடனிருந்தார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான ஜோன் ஹன்சன் பௌயரின் சந்திப்பு நேற்று நடைபெற இருந்தபோதும் இந்தச் சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் இன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்த பின்னர், நாளை ஜனாதிபதியுடனான சந்திப்பில் நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்மும் பங்கேற்கிறார்.

இதனிடையே நோர்வே சிறப்புத் தூதுவர் அவரது பணிக்காலத்தில் நேரடியாக ஊடகங்களை சந்திக்கப் போவதில்லை என்று நோர்வே தூதரகப்பேச்சாளர் தெரிவித்தார்.

## ராணுவ...

பகுதியில் உள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் அமைந்துள்ள இந்த அலுவலகத்தை மூடுமாறு இராணுவத் தளபதிக்கு பாடசாலை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## கடத்தப்பட்டோ...

விடுவிக்கப்படவில்லை. இவர்களது விடுதலைக்கு அரசு எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. எனவே, அவர்களை விடுதலை செய்ய விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரி வடக்கு - கிழக்கு முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். (நி)

## வேலணையை...

தொடர்பாக ஜேர்மனி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## விடுவிக்க...

தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரியிடம் கேட்டபோது - மாணவர்கள் இருவரது கல்விச் செயற்பாடுகளைக் கருத்தில் கொண்டு அவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கையை விரைவாக எடுக்கப்போவதாகஅவர் குறிப்பிட்டார். (வ)

## நிரந்தரமான சமாதானத்...

வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சிங்ஹா ஆகியோரையும் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமாலை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கையும் மற்றும் ராகுல்காந்தி யையும் இந்தர்குமார் குஜ்ராலையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அதேவேளை - இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும், இந்து சமுத்திர வலயப் பாதுகாப்பை உறுதிசெய்து கொள்வதற்காகவும், எந்தவொரு சந்தர்ப்பத்தி லும் தமது அனுபவங்களுடன் கூடிய இராஜதந்திர ஆலோசனைகளை வழங்குவதற்கு எவ்விதத்திலும் தயங்கப் போவதில்லையென இந்தியாவின் சிரேஷ்ட இராஜதந்திரிகள் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனான கலந்துரையாடலின் போது தெரிவித்தனர்.

இலங்கையில் தூதுவர்களாக நீண்டகாலம் பணியாற்றிய இராஜதந்திர அதிகாரிகள் மற்றும் இந்து சமுத்திரப் பாதுகாப்புத் தொடர்பான பொறுப்புகள் வகித்த பாதுகாப்பு ஆலோசகர்கள் ஆகியோர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக் கிரமசிங்கவுடன் நேற்று திங்கட்கிழமை நடத்திய கலந்துரையாடலிலேயே இவ்வாறு தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் - இலங்கைக்கான இந்தியாவின் முன்னாள் தூதுவர்களான குர்பஜன்சிங், லால் மஹோத்ரா, என்.என்.ஜா. எஸ்.சே.எஸ். சக்பால், நரேஷ்வர் தயாள், எம்.கே. ராஜ்கோத்ரா மற்றும் இலங்கையில் இந்திய அமைதிப்படையின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்த லெப்.ஜெனரல் ஏ.எஸ். கல்கட் ஆகியோரும் பங்குபற்றினர்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான மிலிந்த மொறகொட, ரேமகுமார நாணயக்கார மற்றும் புதுடெல்கியிலுள்ள இலங்கைத் தூதுவர் ரொமேஷ் ஜயசிங்க, எதிர்க்கட்சியின் வெளிநாட்டு அலுவல்களுக்கான இணைப்பாளர் கலாநிதி வி.கே.வில்சன், ஊடகச் செயலாளர் சமன் அத் தாவுடஹெட்டி ஆகியோர் பங்குபற்றினர்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வின் போது பின்பற்றவேண்டிய அரசியல் உபாயங்கள் குறித்தும், அதற்காக பிரதான கட்சிகள் இணைந்து செயற்படுவது குறித்தும் இந்திய இராஜதந்திரிகள் பல்வேறு ஆலோசனைகளை ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரிவித்தனர். (தே-01)

AIMS
Vacation @ AIMS
விடுமுறையை பயனுள்ளதாக்குங்கள்
AIMS உடன் இணைந்து
மேலதிக விபரங்களுக்கு 08-04-06ற்கு முன்னர் அலுவலகத்தை அணுகவும்
#118, பலாலி வீதி, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி
Center for FOSS & LAMP

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.